## பார்வைக்கு...

சஞ்சிகை : இளவேனில்
ஆறாவது பதிப்பு : 13 ஜுலை 2014
வெளியிடுவோர் : கேசி தமிழ் மன்றம்
வடிவமைப்பு : G.பார்த்தீபன்
அட்டைப்படம் : திருமதி R.பத்மசிறி / கிக்கோ
தொடர்புகட்கு : கேசி தமிழ் மன்றம்
PO BOX 2516,
Fountain Gate, Vic - 3805
Australia.


# பொருளடக்கம்


| ஆக்கம் | பக்கம் |
|---|---|
| ☐ ஆசிரியர் உரை | 02 |
| ☐ தலைவரின் உள்ளத்திலிருந்து | 03 |
| ☐ "கலைவளன்" சிசு நாகேந்திரன் | 04 |
| ☐ அம்மாவின் அன்பு | 05 |
| ☐ அன்னையர் தினம் | 06 |
| ☐ கச்சிக்கோவின் கதை | 09 |
| ☐ எனது விருப்பமான விளையாட்டு | 09 |
| ☐ நான் கண்ட பயங்கரக் கனவு | 10 |
| ☐ எனது விருப்பமான விளையாட்டு | 10 |
| ☐ இளமை ஒரு வரம் | 11 |
| ☐ வலைப்பூக்கள் | 13 |
| ☐ வணக்கம் | 13 |
| ☐ அப்பா | 14 |
| ☐ வீடு | 14 |
| ☐ சித்திரை வருடப் பிறப்பு | 14 |
| ☐ ஐந்து | 15 |
| ☐ நாட்காட்டி (Calendar) | 16 |
| ☐ காற்றோடு பேசும் கவிஞன் | 19 |
| ☐ பிள்ளைகளுக்கு அதிகம் சுதந்திரம்.. | 20 |
| ☐ வாழ்வின் வசந்தம் | 21 |
| ☐ எங்கள் குடும்பம் | 22 |
| ☐ பெற்றோரைப் பேணுவோம் | 23 |
| ☐ அல்பேட் அயன்ஸ்டீன் | 23 |
| ☐ அழகு தமிழ் பேசிடுவோம் | 24 |
| ☐ மண்டலாய் அப்புவின் நினைவுகளில்.... | 25 |
| ☐ இதுதான் விதியா? | 27 |
| ☐ வீரத்தின் விளைநிலம் | 28 |
| ☐ சுகமான சுமைகள் | 31 |
| ☐ தூங்காத இரவு வேண்டும் | 32 |
| ☐ ஆறு - தொடர்கதை | 38 |
| ☐ அமரர் சட்டத்தரணி சி.கணேசலிங்கம் | 42 |

# இளவேனில்

# வணக்கம்..

கேசி தமிழ் மன்றத்தினால் வெளியிடப்படுகின்ற அரையாண்டு சஞ்சிகையின் ஆறாவது பதிப்பில் உங்களை சந்திப்பதில் பெரு மகிழ்ச்சியடைகின்றோம்.

எமது மன்றத்தினால் கையெழுத்து பிரதியாக உருவாக்கம் பெற்ற இளவேனில் எனும் மழலை, உங்களின் ஆதரவினாலும், அரவணைப்பினாலும் ஆரோக்கியமாக வளர்ந்து நான்காம் ஆண்டில் மெல்ல காலடி வைக்க தொடங்கியிருகின்றது.
தொடர்ந்தும், உங்கள் ஆசியுடன் மென்மேலும் வளர்ந்து, சேவைகள் பல செய்யுமென்ற நம்பிக்கையோடு, வளர்ந்து வரும் படைப்பாளிகளை ஊக்கிவிப்பதோடு மட்டுமன்றி, அவுஸ்திரேலியாவில் அடுத்த சந்ததியினர் தமிழில் எழுத வாசிக்க தெரிந்திருக்க வேண்டும் என்ற காலத்தின் தேவையை உணர்ந்து அவர்களுக்குரிய ஒரு களமாக இந்த இளவேனில் சஞ்சிகை அமைய உங்களின் ஆதரவை வேண்டி நிற்கின்றோம்.

உங்கள் ஆக்கங்களை காலகிரமத்தில் எங்களுக்கு அனுப்பி, இளவேனில் சஞ்சிகை சிறப்புடன் வெளிவர உங்கள் ஒத்துழைப்பை தாழ்மையுடன் வேண்டி நிற்கின்றோம்.

நன்றி
ஆசிரியர் குழு.

# தலைவரின் உள்ளத்திலிருந்து.......

தாய் மொழியின் சிறப்பை - எமது பெறுமதிமிக்க சமூக கலை கலாசாரங்களை எம் இளம் சந்ததியினருக்கு எடுத்துரைக்கும் நோக்கிலும், அவர்களிடத்தில் “தமிழ்“ பற்றை உருவாக்கும் எண்ணத்துடன், அரசியல் சார்பற்று, இலாப நோக்கம் எதுவுமின்றி, சமுதாய முன்னேற்றத்தையே முற்று முழுதாகக் கருத்தில் கொண்டு உருவாக்கப்பட்டதே கேசி தமிழ் மன்றமாகும். எம்மால் எம்மவர்களை தமிழில் எழுத, வாசிக்க தூண்டவேண்டும் எனும் நோக்கோடு வெளியிடப்படுகின்ற “இளவேனில்“ இன் ஆறாவது பதிப்பு இன்று வெளிவருகின்றது.

ஆக்கங்களை பெற நாம் பெருமுயற்சி எடுக்க வேண்டியிருந்த நிலை மாறி, இன்று பலர் ஆர்வத்துடன் எழுதுவதை காணும் போது பெருமகிழ்வு எற்படுகின்றது. இனிவருங் காலங்களில் உங்களில் பலர் எழுதுவீர்கள், சிறுவர்களை எழுத ஊக்குவிப்பீர்கள் என நம்புகின்றேன்.

கேசி தமிழ் மன்றம் சமகால சமூக தேவைகளுக்கேற்ப தனது செயற்பாடுகளை முன்னெடுக்க முனைந்து நிற்கின்றது. உங்களின் ஆலோசனைகள் மற்றும் பங்களிப்பு, கேசி தமிழ் மன்றம் தன் இலக்குகளை நோக்கி செம்மையாய் பயணிக்க வழிசமைக்கும். உங்களின் தொடர்ந்த பங்களிப்பை வேண்டி விடைபெறுகின்றேன்.

நன்றி
தலைவர்,
கேசி தமிழ் மன்றம்.

# ‘கலைவளன்’ சிசு நாகேந்திரன்

வயது தொண்ணூறை தாண்டி விட்ட போதும், மிகவும் இளமையான இதயத்தோடு சளைக்காது தமிழுக்கும் தமிழ்ச் சமூகத்திற்காகவும் ஆஸ்திரேலியாவில் பணியாற்றிக்கொண்டிருக்கின்ற எமது மன்றத்தின் போசகராகிய “கலைவளன்” சிசு நாகேந்திரன் ஐயா குறித்த பதிவு இது.

செய்யும் தொழிலால் கணக்காய்வாளரான இவர், இலங்கை,பிரித்தானியா, மற்றும் ஆஸ்திரேலியா ஆகிய நாடுகளில் வாழ்ந்த காலப்பகுதிகளில் நாடகத் தமிழ் - இயற்தமிழ் - புலம்பெயர் தமிழ் சமூகத்தின் மேம்பாடு என்பவற்றிற்காய் பெரும் தொண்டாற்றியிருக்கின்றார். இலங்கையில் வாழ்ந்த காலப் பகுதியில் 1000 தடவைகளுக்கு மேல் மேடையேறிய “சக்கடத்தார்” நாடகத்தில் நடிகன் - ஈழத்தில் வெளிவந்த “குத்துவிளக்கு” மற்றும் “நிர்மலா” திரைப்படங்களில் நடிகன் என பலவற்றைச் சாதித்தார். யாழ்ப்பாணத்தில் திரு.தாசீசியஸ் உடன் இணைந்து ” களரி” நாடக மன்றத்தினூடாக யாழ் நாடக பாரம்பரியத்திற்கு மெருகூட்டினார். பின்னர் 1985 இல் லண்டனுக்கு புலம்பெயர்ந்த இவர், அங்கு அகதிகள் நலம் பேணும் நிறுவனத்தின் செயலாளராகவும் , அகதிகள் வீடமைப்புக் கழகம் மற்றும் லண்டன் தமிழர் புனர்வாழ்வுக் கழகம் என்பவற்றின் தன்னார்வத் தொண்டராகவும் அளப்பெரும் பணியாற்றினார்.

1994 இல் லண்டனில் ஆற்றிய தமிழ் மற்றும் சமூகப் பணிக்காக பல நிறுவனங்கள் இணைந்து வழங்கிய ”கலைவளன்” எனும் கௌரவ பட்டத்தோடு ஆஸ்திரேலியா வந்தடைந்தார். இங்கு வந்த நாள் முதல் ஆஸ்திரேலிய தமிழர் புனர்வாழ்வுக்கழகத்தில் அங்கத்தவராகச் சேர்ந்து மிகவும் பயனுள்ள சேவைகளை ஆற்றிக்கொண்டிருக்கின்றார். மேலும் ஆஸ்திரேலிய தமிழ் இலக்கிய கலைச் சங்கத்தின் தலைவராக / போசகராக, விக்டோரியா தமிழ் மூத்தோர் சங்கத்தின் பதிப்பாசிரியராக இவர் ஆற்றிய பணிகள் அளப்பரியவை.

சிட்னியிலிருந்து வெளிவரும் “கலப்பை“, கொழும்பிலிருந்து வெளியாகும் “ஞானம்“ முதலான பல சஞ்சிகைகளுக்கு கட்டுரைகள் எழுதிக் கொண்டிருப்பவர் . “அந்தக் காலத்து யாழ்ப்பாணம்“ மற்றும் “பிறந்தமண்ணும் புகலிடமும்“ எனும் அவரது படைப்புக்கள் காத்திரமான சமூக வரலாற்றுப் பதிவுகளாகும். மேலும் நல்லதொரு புகைப்பட கலைஞரான இவர் பல தமிழர் நிகழ்வுகளை அழகாக ஒளிப்பட ஆவணமாக்கியுள்ளார்.

தமிழ், ஆங்கிலம் ஆகிய இரு மொழிகளிலும் பாண்டித்தியம் மிக்க இவர் பல சமூக நிறுவனங்களுக்கு ஆவண மொழிபெயர்ப்பில் பெரும் உதவி புரிந்து வருகின்றார். இன்றும் 12000 இற்கும் மேற்பட்ட தமிழ் சொற்களைச் சேர்த்து தமிழ் - ஆங்கில அகராதி ஒன்றை ஆக்கும் பணியில் ஈடுபட்டுக்கொண்டிருக்கிறார் இந்த இளைஞர். எமது பரிந்துரையின் அடிப்படையில் ஆஸ்திரேலிய கம்பன் கழகம் தனது உயரிய விருதான "மாருதி விருது 2013" இனை வழங்கி அவரை கௌரவித்ததுள்ளது.

எமது கேசி தமிழ் மன்றத்தின் பிறப்பிலிருந்து இன்றுவரை அதன் வளர்ச்சிக்கு மிகவும் காத்திரமான பங்களிப்பை பலவழிகளிலும் எமது போசகரான சிசு ஐயா நல்கி வருகின்றார். அவரின் முன்மாதிரியான வாழ்க்கை எம்மில் பலரும் தமிழ் மற்றும் சமூகப் பணியாற்ற உந்துதலாய் இருக்கின்றது என்று சொன்னால் அது மிகையில்லை.

ஆஸ்திரேலியாவுக்கு வந்த நாள் தொடக்கம் தனக்கு விருப்பமான சமூக சேவையிலும் தமிழ்ப் பணியிலும் தன்னை ஈடுபடுத்திக்கொண்டு இற்றைவரை பல நிறுவனங்களில் சேர்ந்து ஆர்வத்துடனும், அர்ப்பணிப்புடனும் தன்னின மக்களுக்கும் மற்றையோருக்கும் சேவைகள் ஆற்றிவருகிறார். தொண்ணூறு வயதைத் தாண்டிய தள்ளாத வயதிலும் உற்சாகமாகவும்,ஊக்கத்துடனும் தனக்கிட்ட சேவை அலுவல்களைச் செவ்வனே செய்து அவற்றில் மனத் திருப்தியடைதலே அவரின் வாழ்க்கைக் குறிக்கோளாகக் கொண்டு வாழ்ந்து வருகின்ற இவர் , வரும் எம் தலைமுறைகளுக்கெல்லாம் ஓர் முன்மாதிரியாய் திகழ்வார் என்பதில் எவ்வித ஐயமும் இல்லை.

# அம்மாவின் அன்பு



ஓடிவரும் வேளையிலே
ஓரடி நான் சறுக்கி விட்டால்
ஓவென்று அழுதுகொண்டு
ஓடிவந்து அணைத்திடுவாள்

பாரினிலே நான் சிறக்க
பல கதைகள் கூறிடுவாள்
பள்ளிக் கூடம் என்னை அனுப்பி
படலையோரம் காத்திருப்பாள்

பத்துமாதம் சுமந்து என்னை
பக்குவமாய் இறக்கி வைத்தாள்
பண்புடனே நான் வாழ
பல இன்னல் அவள் பட்டாள்

தன்னுடனே தான் சண்டையிட்டு
தன்னலமே தனக்கின்றி
என்னலமே தன்னலமாய்
என் நேரமும் இருந்திடுவாள்

- சுவாதி சுஜீந்திரன் -

# அன்னையர் தினம்

உலகத்தை உவகையுடன் படைத்தான் இறைவன்
இயற்கை அன்னையை இருக்கையில் அமர்த்தினான்
கலக்கமின்றி உயிர்களைப் படைத்தான்
அழகு தெரிந்தது ஆனால் அமைதி மறைந்தது.

சிந்தனை சுழன்றது, உடனே அன்னையைப் படைத்தான்
அன்னையைப் படைத்ததும் அமைதி கிடைத்தது
அமைதி கிடைத்ததும் ஆண்டவன் மறைந்தான்
"அன்னை ஓர் ஆலயம" போற்றிப் புகழ்ந்தது மனித குலம்

நெடிது உயர்ந்து வளர்ந்தன மரங்கள்
செடிகள் கொடிகள் பூத்துக் காய்த்தன
பழுத்தன கனிகள் வாழ்ந்தன உயிர்கள்
அன்னையும் வாழ்ந்தாள் தாய்மையும் உயர்ந்தது

கருவறையில் கருவைக் களைப்பின்றிச் சுமக்கிறவள் பெண்
அழுதுகொண்டே பிறந்த குழந்தை
ஆறு மாதத்தால் "அம்மா" என்று அழைக்கிறது
தொட்டிலில் வைத்து தாலாட்டுப் பாடுவாள் அன்னை

பாலூட்டி சீராட்டி மடிமீதும் தோள் மீதும் சுமப்பாள் அன்னை
வீட்டுக்கு ஒரு அன்னை, குழந்தைக்கு ஒரு "அம்மா"
கனிவுக்கும் அவளே! கதைகள் கூறவும் அவளே!
காத்தல், கருணை மழை பொழிதல்! அன்னையின் அன்றாட வாழ்வு

பாட்டிலும் ஏட்டிலும் அழகு நடை போட்டாள் அன்னை
இறைவனின் இடத்தை இலகுவாய்ப் பிடித்தாள்
"கண் கண்ட தெய்வம்" என்று போற்றினார் ஆன்றோர்
பொன் கொடுத்தும் பெறற்கரிய பொருள் என்றார் கவிஞர்

தாய் பிள்ளை உறவை இணைக்கும் அன்பச் சங்கிலி “அம்மா”
நோயுற்ற போதும் நொந்து மனம் வாடாள் “அன்னை”
.

கண்ணிமைபோல் காப்பாற்றக் கடிதினில் வந்திடுவாள்
பெண் குலத்திற்குப் பெருமை சேர்த்து வைப்பாள் அவள்

பத்துப் பிள்ளைகளைப் பெற்றவளைக்கூட ”பத்தினி” என்பர்
அவளுக்குப் பாரம் தெரிவதில்லை, பசியும் வருவதில்லை
கடல் ஆழத்தை அளவிடலாம், அன்னையின் அன்பை அளவிட முடியாது
அன்னையின் அன்பு எல்லையில்லா வானம் என்பர்
”அன்பே சிவம்” என்பர் அறிவுள்ள ஞானிகள்

கவலை கரைபுரண்டால், கடவுளை நாடுவோம்
பொழுது போகவில்லை என்றால் நட்புறவைத் தேடுவோம்
ஆசை அதிகரித்தால் அமைதி நாடி அலைவோம்
அதிகம் பசி வந்தால் அம்மாவைத் தேடுவோம்

இனிது இனிது ஏகாந்தம் இனிதென்பார் ஞானிகள்
குழலினிது, யாழினிது என்பர் இசை வல்லுனர்
கவிதைகள் இனிதென்பர் காதலர்கள்
குழந்தையின் மழலைச் சொல் இனிதென்பார் பெற்றோர்

இல்லறம் நுழைந்த பெண் இல்லத்தரசியாய் உயர்கிறாள்
நல்லறம் பேணினாலும் நன்மைகள் பல செய்தாலும்
திருமகள் கடாட்சம் பெற்றுச் செல்வமாய் வாழ்ந்தபோதும்
மகவினைப் பெற்றிடும் பேறில்லாதோர் பெரும் புகழ் அடையமாட்டார்

அன்பு என்னும் பூங்காவை அழகாக அமைத்து வைப்பாள்
பொன் பூச்சொரிய வைப்பாள், பொலிவோடு வாழ வைப்பாள்
பன்னரும் புகழ் பெற்றுப் பாரினில் வாழ வைப்பாள்
கனிவான மொழி பகன்று கலக்கம் தெளிய வைப்பாள்

“ஈன்ற பொழிதிற் பெரிதுவக்கும் தன் மகனைச் சான்றோன்
எனக் கேட்ட தாய்” என்றார் வள்ளுவப் பெருந்தகை
புன்னகைக்கு விலை பேசுவான் இளைஞன்
பொன்னகைக்கு விலை பேசுவாள் பெண்
அன்னையின் அன்புக்கு விலை பேச முடியுமா?

துறவிகள் கூட மறக்க முடியாத உறவு "அம்மா"
அன்னை இருக்குமிடம் "அழகான ஆலயம்"
சொந்தங்கள் பந்தங்கள் உறவாடும் மாளிகை
பொறுமை நடமாடும் அழகான அமைதிப் பூங்கா

பறக்கும் பறவையைப் பாருங்கள் அதனிடம் நாம் கற்க அநேகம் உண்டு
கூடு கட்டி வாழ யார் கற்றுக் கொடுத்தார்?
நம் எல்லோர்க்கும் "அன்னை" ஒன்று என்பதனை உணர்ந்த மனிதன்
அன்னைக்கு சிலை வடித்தான் அழகு பண்ணிப் பார்த்தான்

அன்னைக்கு ஆலயம் அமைத்தான் பெயர் பல சூட்டினான்
பாடினான் பரவினான் வணங்கினான் வரம் பல கேட்டான்
போற்றினார் சிலர் தூற்றினார் சிலர்
ஆற்றெண்ணாத்துயர் வந்தபோது ஆலயம் சென்று வந்தான்

அன்னையின் அன்பு அகல் விளக்காய் எரிகிறது
அன்னை திரேசா இன்றைக்கும் வாழ்கின்றார்
பாரதியார் பெண்ணைச் "சக்தி" வடிவில் வைத்துப் பாடினார்
துறவி பட்டினத்தார் அன்னைக்காக அழுது புலம்பினார்

தான் பெற்ற மகனைப் போருக்கனுப்பினாள் சங்க காலப் பெண்
தாமே சென்று போர் புரிந்தனர் ஈழத்துப் பெண்கள்
"நாமாக வாழ்வோம்" என வாழ்கின்றார் வெளிநாட்டுப் பெண்கள்
"அன்பு" வீரமாக மாறியது அன்னையர் தினம் ஒரு நாளாகக் குறுகியது

பூங்கொத்துடன் வருவார் சிலர் உணவுடன் வருவார் சிலர்
முதியோர் விடுதி நோக்கிச் செல்வார் வேறு சிலர்
தமிழன் வரலாற்றில் அன்னைக்குத் தினமில்லை
"அன்னை" அழியா வரம் பெற்றவள்!

நெஞ்சிருக்கும்வரை நினைவுகள் மறைவதில்லை
அன்னை மடியில் அனைவரும் குழந்தைகள்
தாயில் வையேல் உலகமே இல்லை, நீரமில்லை, நிலமுமில்லை
தந்தை தவறிவிட்டால் தாயார் ஒன்று
தாயார் தவறிவிட்டால் தந்தை இரண்டு
வாழ்க பெண்குலம் வாழ்க அன்னையர்

*– பரமேஸ்வரி சச்சிதானந்தம் –*

# கச்சிக்கோவின் கதை

புத்தகம் வாசிப்பது எனது பொழுதுபோக்கு. நான் நிறையப் புத்தகங்கள் வாசிப்பேன். போன வாரம் வாசித்த ஜப்பான் நாட்டின் ஒரு நாயின் உண்மைக் கதையை எழுதப்போகிறேன்.

கச்சிக்கோ (Hachiko) என்ற நாயை ஒரு எஜமான் வளர்த்து வந்தார். எஜமான் ஒவ்வொரு நாளும் புகையிரதத்தில் வேலைக்குச் செல்லும்போது கச்சிக்கோவும் அவருடன் புகையிரத நிலையத்திற்கு சென்று அவரை வழியனுப்பிவிட்டு வீடு செல்லும். மாலையில் அவர் வரும் நேரம் புகையிரத நிலையத்திற்கு செல்லும். அங்கிருந்து எஜமானுடன் வீடு செல்லும். இப்படி ஒவ்வொரு நாளும் செய்தது.

ஆனால் ஒரு நாள் வழமை போல் கச்சிக்கோ புகையிரத நிலையத்தில் காத்திருந்தது. கடைசிப் புகையிரதம் வந்து போயும் எஜமான் வரவில்லை. எஜமான் அன்று அலுவலகத்தில் இறந்து போனார். ஆனால் கச்சிக்கோ தினமும் தன் எஜமானைத் தேடி புகையிரத நிலையத்திற்கு வந்து போனது.

பல வருடங்களின் பின் கச்சிக்கோ புகையிரத நிலையத்தில் இறந்து போனது. மக்கள் அந்த நன்றியுள்ள நாய்க்கு ஒரு சிலை அமைத்தனர். இந்தக் கதை என் மனதை தொட்ட கதை.

**காவியன் பத்மசிறி**

# எனது விருப்பமான விளையாட்டு

1. எனது விருப்பமான விளையாட்டு கால்பந்து ஆகும்.
2. ஒரு அணியில் பதினெட்டுப் பேர் விளையாடுவார்கள்.
3. இந்த விளையாட்டு ஒரு மணித்தியாலம் இருபது நிமிடம் விளையாடப்படும்.
4. ஒவ்வொரு பதினைந்து நிமிடத்திற்கும் இரண்டு நிமிட இடைவேளை விடப்படும்.
5. இந்த விளையாட்டில் பந்தை காலால் கோல் கம்பத்தில் வைக்க வேண்டும்

**ஆரணன் மதியழகன்**

# நான் கண்ட பயங்கரக் கனவு

ஒரு நாள் நான் இரண்டு வானவில்லைக் கண்டேன். அதைக் கண்டதுடன் அதன் முடிவிற்கு ஓடினேன். நான் வந்தவுடன் ஒரு தங்கச் சட்டியைக் கண்டேன். அந்த சட்டியை எடுக்கப் போகும் பொழுது சிவபெருமான் என்னை நிறுத்தி விட்டார். அவர் நிறுத்தும் பொழுது முருகன் "ஏன் நிறுத்தி விட்டீர்கள்" என்று சிவபெருமானைக் குறி பார்த்துக் கேட்டார்.

பிறகு சிவபெருமான் சொல்கிறார் "எங்கள் தங்கச்சட்டியை திருடப் பார்க்கிறாள்". இடையில் வந்த உமாதேவியார் என்னை இயமனிடம் அனுப்பிவிட்டார். அங்கே ஆயிரம் கொடுமைகள் நடந்து கொண்டு இருந்தன. மனிதர்களை ஒரு சட்டியில் போட்டு எரிப்பது, காலில் ஆணி போட்டு அடிப்பது, ஒரு காண்டாமிருகத்தால் எலும்புகளை உடைப்பது. அதைப் பார்த்ததும் நான் அதிர்ச்சி அடைந்து விட்டேன். சற்று நேரத்தில் இயமனின் அமைச்சர் என்னைக் கண்டு "நில்லும் அங்கே" என்று சொல்லி என்னை இயமனிடம் கொண்டு போய்விட்டார். அப்பொழுது இயமன் மடியில் என்னை வைதுக்கொண்டு "என்ன வேண்டும் நீ இங்கிருந்து போய் விடு". அப்பொழுது நான் அவர் மடியிலிருந்து எழும்பி அப்படியே ஓடி வந்தேன். அப்பொழுது சிவபெருமான் என்னைக் கண்டு கைகளை இழுத்து, அந்த தங்கச்சட்டியை எனக்கு பரிசாகக் கொடுத்தார். நான் கேட்டேன் "ஏன் எனக்கு இதைப் பரிசாகத் தருகிறீர்கள்".
அவர் திரும்பக் கூறினார், நீ இயமனின் மடியில் இருந்தாய், அந்தத் தைரியம் எனக்குப் பிடித்திருந்தது.

என்னை சிவபெருமானின் குடும்பம் பூலோகத்துக்கு அனுப்பி வைத்தார்கள்.

**அபிதாரணி~சந்திரன்**

# எனது விருப்பமான விளையாட்டு

1. எனது விருப்பமான விளையாட்டு கூடைப்பந்து ஆகும்.
2. ஒரு அணியில் ஐந்து பேர் விளையாடுவார்கள்.
3. இந்த விளையாட்டு ஒரு மணித்தியாலம் விளையாடப்படும்.
4. ஒவ்வொரு பதினைந்து நிமிடத்திற்கும் இரண்டு நிமிட இடைவேளை விடப்படும்.
5. கூடைப்பந்து கம்பத்தின் உயரம் மூன்று மீற்றர் ஆகும்.

**நரேன் நெடுமாறன்**

# இளமை ஒரு வரம்

அதிகாலை அமைதியை ஊடுருவிக்கொண்டு சுப்ரபாதமாய் ஒலித்தது அலாரம். இமைகள் மூடியபடியே கை நீட்டி அதை நிறுத்திய கவிதா இரண்டி நிமிடம் அப்படியே அந்த அதிகாலை அமைதியை ரசித்தாள். அதற்குமேல் அனுபவிக்க முடியாமல் யதார்த்தம் உறைக்க மெதுவாக எழுந்தவள் நெஞ்சிலிருந்து நழுவி விழுந்த அந்த வாசிக்கப்படாத புத்தகத்தை பக்கத்து மேசையில் வைத்தாள்.

வழக்கம்போலவே கடிகாரமுள்ளாய் இயங்கத் தொடங்கினாள். அதிகாலை ஆரவாரம். ஒவ்வொருவராய் எழுந்து அவசரஅவசரமாய் வெளிக்கிட்டு, அனைவருக்கும் காலை உணவு, மதிய உணவு தயார் படுத்தி, இதற்கிடையில் அப்பாவையும் எழுப்பி, அவர் காரியங்கள் அனைத்தும் செய்து, உணவு, தேனீர், புத்தகங்கள், பத்திரிகை எடுத்து வைத்துவிட்டு, குழந்தைகளை அள்ளிக்கொண்டு காரில் ஏறும்போது மணி எட்டு. நேரத்திற்கு வெளிக்கிட்டாயிற்று என்று நிம்மதியோடு இத்தனை அவசரத்திலும் கைகொடுத்த கணவனுக்கு பார்வையாலேயே நன்றி சொல்லியபடி புறப்பட்டாள் கவிதா.

பிள்ளைகளை அவரவர் பள்ளிகளில் நேரத்திற்கு இறக்கிவிட்டு வேலைக்கு போனவளுக்கு அங்கும் ஓய்வில்லை. மாத முடிவென்பதால் ஆயிரம் வேலைகள். ஒரு கப் கோப்பியோடு அத்தனையும் முடித்து இடையில் இருமுறை வீட்டில் தந்தையின் நலத்தையும் தொலைபேசியில் விசாரித்து, மூன்று மணியானதும் மீண்டும் ஓட்டம். பிள்ளைகளைப் பள்ளியிலிருந்து அழைத்து வந்தவள் அவர்கள் மூவரின் கதைகளையும் பொறுமையாக கேட்டபடியே வீட்டு வேலைகளையும் செய்தாள். இதுவும் அவர்கள் அன்றாட வழக்கம். பள்ளியில் நடந்த அனைத்தையும் தாயிடம் ஒப்பிக்காவிடில் பிள்ளைகளுக்கும் எதுவும் ஓடாது.

இதைத்தொடர்ந்து டெனிஸ், மிருதங்கம் என்று ஓட்டம் முடிந்து பிள்ளைகளின் வீட்டு வேலை, இரவு உணவு என்று வழக்கமான சம்பிரதாயங்கள் அனைத்தும் முடிந்து அனைவரையும் படுக்க வைத்தபின்தான் அவளது நேரம். அதுவே அவளும் சுரேனும் அன்றைய விடயங்களை பகிர்ந்துகொண்டும் குடும்ப விவரங்கள் ஆலோசனை செய்வதுமான நேரம்.

அன்றைய தினம் கவிதா தேடிச் சென்றபோது சுரேனோ ஒரு கடிதத்தை வைத்துக் கொண்டு ஆழ்ந்த யோசனையில் இருந்தான். மூத்த மகனின் பள்ளியிலிருந்து வந்த கடிதம். அனைத்து மாணவர்களும் சொந்தமாக Laptop வாங்கவேண்டும்.

ஏற்கெனவே பிள்ளைகள் வளரவளர செலவுகள் கூடிக்கொண்டு போகின்றது. அண்மையில் தந்தையின் மருத்துவச் செலவுகளும் அதிகமாகிறது. அதில் இது வேறு புதிதாக...

”ஏனப்பா! நான் வேணுமென்றால் என்ர வேலை நேரத்தை கூட்டி கேட்கவோ? நான் முழு நேரம் வேலைக்கு போனால் கொஞ்சம் சமாளிக்கலாம்” கவிதா மெதுவாக தன் எண்ணத்தை வெளியிட்டாள்.

”இல்லை, கவிதா, மூத்தவனுக்கு 13 வயது. பொல்லாத வயது. இந்த நேரம் நீர் அவனுடன் இருக்கவேண்டியது முக்கியம். அதோடு மாமாவிற்கும் வரவர சுகமில்லாமல் வருகுது. நீர் இயலுமானவரை கூட இருப்பது நல்லது. இதில் நீர் முழு நேர வேலைக்கு போவது சரிவராது.” இது சுரேனின் பதில்.
தொடர்ந்தவன் ”வாற இரண்டு மூன்று மாதத்திற்கு எங்களுக்கு சனி ஞாயிறு வேலை இருக்கிறது. விருப்பமானவர்கள் விண்ணப்பிக்கலாம் என்று இன்றுதான் அறிவித்தல் வந்தது. கொஞ்ச நாளைக்கு நான் அதை செய்யலாம். நீர் யோசிக்காமல் குடும்பத்தை பாரும்.”

ஒருவாறு இருவரும் ஒரு தீர்மானத்திற்கு வந்தார்கள். ஒரு பிரச்சனை தீர்ந்த நிம்மதியிலும் தன்னைப் புரிந்துகொண்ட கணவனின் தீர்மானம் தந்த சந்தோஷத்திலும் படுக்கையை நாடினாள் கவிதா.

கட்டிலில் படுத்தபடியே சில நாட்களாக வாசிக்க முயன்றுகொண்டிருக்கும் அந்த இளவேனில் புத்தகத்தை கையில் எடுத்தாள். புத்தகத்தை திறந்தவள் கண்கள் முதுமை ஒரு சாபமா? என்ற தலைப்பை படிக்கையிலேயே களைப்பில் இமைகள் மூடின. வழக்கம் போல வாசிக்காமலே உறங்கிப்போன கவிதாவின் முகத்தில் தன் கடமைகளை செவ்வனே செய்த திருப்தி குடிகொண்டது. இதுதான் இளமை தந்த வரமோ...?

*-ஷீலா-*

# வலைப்பூக்கள்




வலைப்பூவெனும் வலையால்,
இணையத்தின் துணையால்,
கடலலைபோல் எழுந்தேகி...
எண்ணக்கடலின் கரை தேடலாம்!

வண்ண வண்ண வடிவங்களாய்...
எண்ணமெல்லாம் வடிக்கலாம்!
சின்னச் சின்னச் சித்திரமாய்...
எழுத்துக்களைச் செதுக்கலாம்!

காகிதத்தில் எழுதி,
கடிதங்களாய் அனுப்பி,
காத்திருந்து காத்திருந்து...
பார்த்திருக்கத் தேவையில்லை!


இணையச் சுவரில் கிறுக்கிட...
வலைப்பதிவொன்று போதுமே!
உலகமெல்லாம் பகிர்ந்திட...
வலைப்பூவுலகும் விரிந்திடுமே!

விசைப்பலகை தடவி விரலால்,
வலைப்பூவில் தூவி வினாடிகளில்...
உலகமெங்கும் மலர்ந்திடுமே - உங்கள்
எண்ணங்கள் வண்ணங்களாய்...!

எண்ணங்களை எழுத்துக்களாய்...
படைப்பவனும் பிரம்மன்தான் !
வண்ணம் தரும் வார்த்தைகளை...
வடிப்பவனும் ரவிவர்மன்தான் !!

வலைப்பூவை உருவாக்கி
எண்ணங்களை வலையாக்கி
எழுத்துக்களைத் துணையாக்கி
ஆக்கங்கள் படைத்திடுவோம்!
எம் தாய்த்தமிழை வளர்த்திடுவோம் !!

**ஒருவன்**



வணக்கம்.
நான் மனாசே, வயது
ஏழு.
என் அடையாளத்தைக்
காக்க என் மொழியைக்
கற்கிறேன்.

அ ஆ இ ஈ உ
ஊ எ ஏ ஐ ஒ
ஓ ஔ ஃ


நன்றி.

அப்பா



இவர் எனது அப்பா
என்னுடன் மெதுவாக
கதைப்பார்
எனக்கு பொம்மை
வாங்கி தருவார்

நியந்தினி
(4 வயது)




அங்கயன் மயூரன்
4 வயது

சித்திரை வருடப்பிறப்பு

தமிழர்களின் பண்டிகைகளில் சித்திரை வருடப்பிறப்பும் ஒன்று. இது சித்திரை மாதத்தில் வரும். நாங்கள் அதிகாலையில் எழுந்து மருத்துநீர் வைத்து நீராடுவோம். புத்தாடை அணிந்து கோவிலுக்குப் போவோம். நண்பர்கள் எமது வீட்டுக்கு வருவார்கள். நாங்களும் அவர்கள் வீட்டுக்குப் போவோம். மகிழ்ச்சியாக விளையாடுவோம். வருடப் பிறப்பு அன்று கைவிசேடம் தருவார்கள். சித்திரை வருடப்பிறப்பு எனக்கு மிகவும் பிடித்த தமிழ்ப்பண்டிகையாகும்.

அக்ஷயன் ஆதவன்

# ஐந்து

## ஐம்புலன் / ஐம்பொறி

மனிதர்களுக்கு ஐந்து புலன்களும், ஐந்து பொறிகளும் இருக்கின்றன. இவைகள் சூழலை உணர்ந்துகொள்ள உதவும்.

கேட்டல் → காது
பார்த்தல் → கண்
மணத்தல் → மூக்கு
ருசித்தல் → வாய்
உணர்தல் → தோல்

## ஐங்கரன்



ஐங்கரன்தான் பிள்ளையார். அவருக்கு நான்கு கைகளும் ஒரு தும்பிக்கையும் இருப்பதால் அவரை நாங்கள் ஐங்கரன் என்று சொல்கிறோம்.

## ஐம்பெரும் காப்பியங்கள்

தமிழ் இலக்கியத்தில் ஐம்பெரும் காப்பியங்கள் என்று ஐந்து பெரும் கதைகள் தொகுப்பு உண்டு. இவை பெண்களின் ஆபரணங்களை அடிப்படையாகக் கொண்ட கதைகள். அந்தக் கதைகளும், அவற்றுக்கான நகைகளும்...

சிலம்பு → சிலப்பதிகாரம்
வளையல் → வளையாபதி
குண்டலம் → குண்டலகேசி
மேகலை → மணிமேகலை
சிந்தாமணி → சீவக சிந்தாமணி

## ஐம்பொன்

ஐம்பொன் சிலைகளில் உபயோகிக்கப்பட்டது. ஐம்பொன் பஞ்சலோகம் என்றும் அழைக்கப்படும். அவை

தங்கம்
வெள்ளி
பித்தளை
செம்பு
நாகம்

## ஐந்திணை

உலகத்தில் நிலங்கள் ஐந்து வகையாகப் பிரிக்கப்படுகிறது. அவை

குறிஞ்சி → மலை சார்ந்த இடம்
நெய்தல் → கடல் சார்ந்த இடம்
பாலை → மணல் சார்ந்த இடம்
மருதம் → வயல் சார்ந்த இடம்
முல்லை → காடு சார்ந்த இடம்

**ஆரூரன் மதியழகன்**

# நாட்காட்டி (Calendar)

## முன்னுரை

நாட்காட்டி என்பது சமூக, வர்த்தக, சமய மற்றும் நிர்வாக உபயோகத்திற்காக நாட்களையும் காலங்களையும் ஒழுங்கு படுத்தப்பட்ட ஒரு முறையாகும். இதன்படி கால அளவுகள் நாட்கள், கிழமைகள், மாதங்கள் மற்றும் வருடங்கள் என பிரிக்கப்பட்டுள்ளது. திகதி என்பது ஒரு குறிப்பிட்ட நாளை குறிப்பதாகும். இன்றைய நவநாகரீகவுலகில் நாட்காட்டி ஒரு இன்றியமையாத சாதனமாகும். இதன் உதவியுடன் நாம் எமது கருமங்களை ஒழுங்காகவும் குறித்த நேரத்திலும் செய்து முடிக்கக் கூடியதாக இருக்கின்றது.

நமது சமூகத்தை பொறுத்த மட்டில் இரண்டு விதமான நாட்காட்டிகள் பாவனையில் உள்ளன. முதலாலது, இன்று உலகமெங்கும் பாவனையிலுள்ள மேற்கத்திய அல்லது ஆங்கில நாட்காட்டியாகும். மற்றது, முக்கியமாக இந்துக்கள் பின்பற்றும் தமிழ் நாட்காட்டியாகும். இவ்விரண்டும் வெவ்வேறு விதமாக கணிக்கப்பட்டுள்ளன. அவற்றைப் பற்றி சற்று விரிவாகப் பார்ப்போம்.

## ஆங்கில நாட்காட்டி

தற்பொழுது உலகம் எங்கும் அறிமுகம் செய்யப்பட்டு பாவனையில் உள்ள மேற்கத்திய ஆங்கில நாட்காட்டியானது பாப்பரசர் 13வது கிரகோரியால் (Pope Gregory XIII) 1582ம் ஆண்டு அக்டோபர் மாதம் 15ம் நாள் அறிமுகம் செய்யப்பட்டு அமுலுக்கு வந்தது. அதனால் அதனை கிரகோரியன் நாட்காட்டி என்று அழைக்கப்படுகிறது. அதற்கு முன்னோடியான ஜூலியன் கலண்டர் (Julian Calendar) முறை ரோமானிய அரசர் ஜூலிய சீசரால் (Julius Ceasar) கி.மு. 48ம் ஆண்டு அமலாக்கப்பட்டது.

இந்த இரண்டு முறையும், பூமி சூரியனை ஒரு முறை சுற்றி வர எடுக்கும் கால அளவு ஒரு வருடம் என கணிக்கப்பட்டுள்ளது. ஜூலியன் கலண்டர் முறைப்படி பூமி சூரியனை ஒருமுறை சுற்றி வருவதற்கு எடுக்கும் காலம் 365¼ நாட்கள், அதாவது 365 நாட்களும் 6 மணித்தியாலமும் என கணிக்கப்பட்டது. இதன் பிரகாரம் ஒரு வருடம் (365¼ நாட்கள்) 12 மாதங்களாக பிரிக்கப்பட்டு, 7 மாதங்களுக்கு 31 நாட்களும் 4 மாதங்களுக்கு 30 நாட்களும் மாசி (February) மாதம் 28 நாட்களுமாக மொத்தம் 365 நாட்களாக கணிக்கப்பட்டது. எஞ்சிய கால் நாளை நாலு வருடங்களுக்கு ஒரு நாள் வீதம் மாசி மாதத்தில் 29 நாட்களாக சேர்க்கப்பட்டது. அதை லீப் வருடம் (Leap year) எனப்படும்.

ஆனால், உண்மையில் பூமி சூரியனை ஒரு முறை சுற்றி வர (Tropical revolution of the earth around the Sun) எடுக்கும் காலம் 365 நாட்கள் 5 மணித்தியாலம் 49 நிமிடம் 12 விநாடி ஆகும். அதாவது 365 நாட்கள் 6 மணித்தியாலத்துடன் ஒப்பிடும் பொழுது இது 10 நிமிடம் 48 விநாடிகள் குறைவாகும். இதன் பிரகாரம் ஜூலியன் கலண்டர் முறைப்படி ஒவ்வொரு வருடமும் கால அளவு 10 நிமிடம் 48 விநாடி வீதமாக 400 ஆண்டுகளில் 3 நாட்கள் முன்னோக்கி போய் (A gain of 3 days every 400 years) 15ம் நூற்றாண்டில் கால அளவு 11 நாட்கள் முன்னோக்கி சென்றுவிட்டது.

இதன் காரணமாக, ஈஸ்டர் (Easter) பண்டிகையைக் கொண்டாடுவதற்கு நான்காம் நூற்றாண்டில் நிர்ணயிக்கப்பட்ட திகதி மாறுபட்டதால் கி.பி. 1582ம் ஆண்டு அதுவரை பாவனையில் இருந்த ஜூலியன் கலண்டரில் இரண்டு மாற்றங்கள் செய்யப்பட்டன.

முதலாவது மாற்றம், ஜூலியன் கலண்டரில் பத்து நாட்கள் குறைக்கப்பட்டது. இரண்டாவது மாற்றம், எந்த வருடம் 100ஆல் பிரிக்கக் கூடியதாகவும், ஆனால் 400ஆல் பிரிக்க முடியாததாகவும் உள்ள வருடமோ, அந்த வருடம் லீப் வருடம் (Leap year) ஆகமாட்டாது. இந்த புதிய விதியின்படி 2000வரு ஆண்டு லீப் வருடம் ஆகும். ஆனால் 1900வது மற்றும் 2100வது வருடங்கள் லீப் வருடங்களாகாது. இதனால் கால அளவு முன்நோக்கி போவது தவிர்க்கப்பட்டது. இந்த கணிப்புப் படியும் 3500 வருடங்களில் ஒரு நாள் வீதம் முன் செல்லும். (Gains one day in 3500 years).

## தமிழ் நாட்காட்டி

இந்தியாவில் தமிழ் நாட்காட்டி முறை இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னிருந்து பாவனையில் இருந்தற்கு சான்றுகள் உள்ளன. இது பற்றி ஐம்பெரும் காப்பியங்களிலும் கூறப்பட்டுள்ளது. தமிழ் நாட்காட்டியை இந்துக்களே தமது கலாசார, மத மற்றும் வேளாண்மை சார்ந்த நிகழ்வுகளுக்காக இன்றும் பயன்படுத்துகிறார்கள். இம்முறை மேற்கத்திய முறையிலிருந்து மாறுபட்டது. நமது இந்து சமய கோட்பாட்டின்படி காலம் நான்கு யுகங்களாக பிரிக்கப் பட்டுள்ளது.இப்பொழுது மூன்று யுகங்கள் முடிந்து கடைசி யுகமாகிய கலியுகத்தில் 5116ம் ஆண்டு நடைபெறுகின்றது. கலியுகம்4,320,000 ஆண்டுகளைக் கொண்டதாகும்.

# தமிழ் வருடம்

சாதாரணமாக, தமிழ் வருடம் சித்திரை மாதத்தில் ஆரம்பமாகி பங்குனி மாதத்தில் முடிவடையும். ஆனால் ஒரு சாரார் தமிழ் புத்தாண்டு தை மாதத்தில் தொடங்கி மார்கழி மாதத்தில் முடிவடைவதாக கருதுகின்றனர். இது எவ்வாறாயினும், சூரியன் சித்திரை மாதத்தில் மேஷராசியில் பிரவேசித்து ஒவ்வொரு மாதமும் தொடர்ந்து பதினொரு இராசிகளில் பயணித்து திரும்பவும் மேஷ இராசியில் பிரவேசிக்கும் கால அளவு ஒரு வருடம் என கணிக்கப்பட்டுள்ளது. (படம் 1)

| | | | |
|---|---|---|---|
| மீனம்<br>பங்குனி | மேஷம்<br>சித்திரை | இடபம்<br>வைகாசி | மிதுனம்<br>ஆனி |
| கும்பம்<br>மாசி | | | கடகம்<br>ஆடி |
| மகரம்<br>தை | | | சிம்மம்<br>ஆவணி |
| தனுசு<br>மார்கழி | விருச்சிகம்<br>கார்த்திகை | துலாம்<br>ஐப்பசி | கன்னி<br>புரட்டாதி |

படம் 1 இராசி மண்டல சக்கரமும் மாதங்களும்

இந்த கால அளவு 365 நாட்கள், 6 மணித்தியாலம், 9 நிமிடம், 9.5 வி-னாடி ஆகும். இது நிரையான முறையாகும். (Sidereal revolution of earth around the Sun). இது வானமண்டலத்தில் உள்ள நட்சத்திரங்களின் நிலையைக் கொண்டு கணிக்கப்பட்டுள்ளது. மேலே குறிப்பிட்ட மேற்கத்திய நேரத்திலும் பார்க்க 20 நிமிடங்கள் கூடுதலாகும்.

# தமிழ் வருடங்களின் சுழற்சி

தமிழ் நாட்காட்டியின்படி ஒவ்வொரு வருடத்திற்கும் வெவ்வேறு பெயர்கள் சூட்டப்பட்டுள்ளன. இதன்படி, முதலாவது வருடம் பிரபவ வருடம் ஆகும். இரண்டாவது விபவ வருடம். இப்படி தொடர்ந்து அறுபது வருடங்களுக்கு வெவ்வேறு பெயர்கள் கொடுக்கப்பட்டுள்ளது. இதன்பிரகாரம், அறுபதாவது வருடம், அட்சய வருடமாகும். அறுபது வருடங்கள் முடிந்தபின் திரும்பவும் சுழற்சி முறையில் பிரபவ வருடம் ஆரம்பமாகும். தற்சமயம் ஒரு சுழற்சியில் 27வது விஜய வருடம் முடிந்து 28வது ஜய வருடம் சித்திரை மாதத்தில் ஆரம்பமாகி நடைபெறுகிறது. அடுத்து வருவது 29வது மன்மத வருடமாகும்.

இந்த 60 வருட சுழற்சி முறை வியாழன் மற்றும் சனி கிரகங்களின் (Jupiter and Saturn Planets) நிலையை வைத்து கணிக்கப்பட்டுள்ளது. இவ்விரண்டு கிரகங்களும் குறிப்பிட்ட இடத்திலிருந்து சூரியனைச் சுற்றி வருகையில் அதே இடத்தை அடைவதற்கு எடுக்கும் காலம் 60 வருடங்களாகும்.

## தமிழ் மாதங்கள்

மேலே குறிப்பிட்ட பிரகாரம் சூரியன் ஒரு இராசியை கடப்பதற்கு எடுக்கும் காலம் ஒரு மாதமாகும். ஒரு வருடத்தில் பூமிக்கும் சூரியனுக்கும் உள்ள தூரம் வேறுபடுவதால் ஒரு இராசியை சூரியன் கடப்பதற்கு எடுக்கும் காலமும் வேறுபடும். இதனால், மாத அளவு 29 முதல் 32 நாட்கள் வரை வேறுபடும். உதாரணமாக, மார்கழி மாதத்தில் பூமிக்கும் சூரியனுக்கும் உள்ள தூரம் குறைவதினால் சூரியன் தனு இராசியைக் கடப்பதற்கு எடுக்கும் காலம் 29 நாட்கள். ஆனால் வைகாசி ஆடி மாதங்களில் சூரியனுக்கும் பூமிக்கும் உள்ள தூரம் கூடுவதனால் இடபம் மற்றும் கடக இராசியை கடப்பதற்கு 32 நாட்களாகும். வருடத்திற்கு வருடம் இது சிறிது மாறுபடும்.

சூரியன் ஒவ்வொரு இராசியிலும் பிரவேசிக்கும் நேரத்தை சங்கிராந்தி என்பர். உதாரணமாக, மேஷஇராசியில் பிரவேசிக்கும் நேரத்தை மேஷசங்கிராந்தி (சித்திரை வருடம் பிறக்கும் நேரம்) எனப்படும். இது சித்திரை மாத முதல் நாளாகும். சங்கிராந்தி சூரிய அஸ்தமனத்திற்கு முன் நிகழுமானால் அன்றும், சூரிய அஸ்தமனத்திற்கு பின் நிகழுமானால் மறுநாளும் மாத பிறப்பு முதல் திகதியாக கொள்ளப்படும். இது மற்றய மாதங்களுக்கும்/இராசிகளுக்கும் பொருந்தும்.

**சி. சிவசுப்பிரமணியம்**


# காற்றோடு பேசும் கவிஞன்

கைக்குள் எட்டாத காற்றே - நீ
பேசி வந்த சுவடுகளை சொல்வாயா
புல் நுனியில் தலை தூங்கும் பனியோடு
பேசினேன்
வான் தவழும் முகிலோடு பேசினேன்
மழை கொட்டும் சாரலோடு சல்லாபித்துப்
பேசினேன்
ஆதவனின் கதிரொளியை இருள் தொலையும்
வேளையிலே இருகரமும் நான் நீட்டிப்
பேசினேன்
மூங்கில் துளை எங்கும் விரல் மூட முன்
வந்து பேசினேன்
மழலையின் அமுத வாய் திறந்து பொழிகின்ற
மொழி வழியால் பேசினேன்
காதலர் ஊடல் களைகின்ற வேளையில்
கணப்பொழுது ஓடையில் பேசினேன்
மகிழ்ச்சியில் பேசிய வேளைகள் இப்போது
சொன்னேன்
இனி மற்றவர் என்னால் துயருற்றதை
இன்னொரு நாள் சொல்கிறேன்

*இவன்*
*ஆவூரான்*

# பிள்ளைகளுக்கு அதிக சுதந்திரம் கொடுப்பதனால் ஏற்படும் தீமைகள்

எமது பெற்றோரின் காலத்துடன் ஒப்பிடும்போது, இப்போது பெற்றோர்கள் பிள்ளைகளுக்கு அதிக சுதந்திரம் கொடுக்கிறார்கள். இது அவர்கள் உண்ணும் உணவு, உடுத்தும் உடையிலிருந்து, தேர்ந்தெடுக்கும் படிப்பு, பழக்கவழக்கங்கள், நண்பர்கள் மற்றும் செலவழிக்கும் பணம் என்று எல்லாவற்றிலும் பிள்ளைகளுக்கு கூடுதல் சுதந்திரம் கிடைக்கிறது. இதனால் நன்மையிலும் மேலாக தீமையே விளைவிக்கிறது என்பது எனது கருத்தாகும்.




பிள்ளைகளுக்கு பெற்றார்கள் இப்பொழுது உணவு விடயத்தில் நிறைய சுதந்திரம் கொடுக்கிறார்கள். முன்பெல்லாம் வீட்டில் என்ன சமைக்கிறார்களோ அதைத்தான் பிள்ளைகளிலிருந்து பெரியவர்கள்வரை வீட்டில் உள்ள அனைவரும் உண்பார்கள். இப்பொழுது பிள்ளைகள் உறைப்பு சாப்பிட முடியாது, மீன் சாப்பிட விருப்பமில்லை, சாப்பாடு சரியில்லை, McDonalds வாங்கித் தாங்கோ என்றெல்லாம் கேட்பார்கள். அதற்குப் பெற்றோரும் "பாவம் பிள்ளை" என்று சொல்லி அவர்களின் விருப்பத்திற்கேற்ப வாங்கிக் கொடுக்கிறார்கள். மற்றும், வெளியில் போகும்போது விளையாட்டுப் பொருளோ, உடையோ வேண்டும் என்று கேட்டால் உடனே வாங்கிக் கொடுக்கிறார்கள். இந்தச் சுதந்திரம் பிள்ளைகள் நினைத்தபடி நடக்கவும், கேட்டதெல்லாம் கிடைக்கும் என்று எண்ணவும் வைக்கிறது. அத்துடன் நல்ல உணவுப் பழக்கங்களை விட்டு, கண்ட இடத்தில் கண்டதை உண்ணவும், தேவைக்கு அவசியமில்லாத பொருட்களை வாங்கிப் பழகவும் வைக்கிறது.

தாங்கள் நினைத்தபடி உடை உடுத்த சுதந்திரம் கொடுப்பதால் பிள்ளைகள் நாகரீகம் என்ற பெயரில் தமது கலாச்சாரத்திற்கு பொருந்தாத உடைகளை உடுத்துகிறார்கள். இது சில வேளைகளில் கண்ணியமில்லாமல் உடுத்துவதால் மற்றவர்கள் அவர்களை அடக்கமில்லாத பிள்ளை என்று எண்ணவும், சிலரின் சேட்டைகளுக்கு ஆளாகவும் நேரிடுகிறது.

இதுபோல்தான், நண்பர்களுடன் பழகுவதில் அதிக சுதந்திரம் கொடுப்பதால் சில வேளைகளில் பிள்ளைகள் படிக்கவேண்டிய நேரத்தை வீணாக்கவும், மது, போதைப் பொருட்கள் பாவித்தல் போன்ற கெட்ட பழக்கங்களை பழகலும் நேரிடுகிறது. எத்தனை இளைஞர்களும் யுவதிகளும் பிழையான நட்பினால் கெட்டுப் போவதையும், விபத்தில் மாட்டி சில வேளைகளில் இறப்பதனையும், ஏன், கொலை கூட செய்யப்படுவதையும் தினமும் செய்தியில் கேட்டுக்கொண்டுதானே இருக்கின்றோம்.

பிள்ளைகளுக்கு பெற்றோர் ஓரளவு சுதந்திரம் கொடுப்பது சரியென்றாலும், அதிக சுதந்திரம் கொடுப்பதால் மேல் விபரித்தவாறு நன்மையை விட தீமையே அதிகம் என்பதுதான் என் கருத்து.

**— நித்யா பத்மசிறி —**

# வாழ்வின் வசந்தம்.......

தெளிந்த வானம், பிரகாசமான சந்திரன், மின்னும் நட்சத்திரங்கள். இந்த கருநீல இரவு வானத்தில் ஒரு சிறிய ஒற்றை நட்சத்திரத்தை அவள் கண்கள் வெறித்துப் பார்த்தன. கன்னங்களில் கண்ணீர் கோடு இறங்கியது.

அந்த அமைதியான கடற்கரையில் அவள் மட்டும் தனியாக அமர்ந்திருந்தாள். கடற்கரையில் கடல் அலைகள், அவள் மனதில் ஞாபகங்கள் தொலைந்து போன அவள் வாழ்க்கையின் வசந்தம். அந்த குறுகுறுத்த நீல கண்கள், பட்டுப்போன்ற மண்ணிற தலைமயிர், உள்ளம் கவர்ந்த சின்னச் சிரிப்பு, குட்டி மூக்கு, அந்த பிஞ்சுப் பாதங்கள் எடுத்து வைத்த முதல் அடி, மழலை குரலில் "அம்மா" என்று அழைத்த முதல் வார்த்தை, ஒன்றின் பின் ஒன்றாய் அவள் நினைவில் வந்தது. இதே கடற்கரையில் தண்ணீரில் கால் நனைத்து அவனோடு விளையாடியது, மைதானத்தில் பந்து எறிந்தது, புல்லில் பட்டம் விட்டது. இத்தனையும் எங்கே போனதோ?

அவர்கள் வாழ்க்கையில் திடீரென்று ஒரு புயல் வீசியது. துள்ளித் திரிந்த பிள்ளை, ஒரு கணத்தில் துவண்டு விழுந்தான். அதில் தொடங்கியது மருத்துவமனைக்கும், வீட்டுக்குமான அன்றாட அலைச்சல், மருந்துகள், அழுகைகள், கோபங்கள், சண்டைகள். அனைவருடைய அறிவுக்கு யதார்த்தம் விளங்கியது. ஆனால் மனமோ ஏற்க மறுத்தது. இத்தனை போராட்டங்களும் பிஞ்சு முகத்துக்கு முன்னால் திரை போட்டு மறைக்க வேண்டியிருந்தது. எல்லா துன்பங்களையும் அவனிடமிருந்து ஒழிக்கவேண்டியிருந்தது. ஆனால் இந்த நாடகங்கள் அதிக நாள் நீடிக்கவில்லை. நோயின் தீவிரம் அதிகரிக்கும் போது, அந்த சிறிய உள்ளமே உண்மையை உணர்ந்து கொண்டது. யாரும் அவன் கண்களை நேருக்கு நேர் பார்க்க முடியாமல் போ-னது.

அவனின் கடைசி நாள் எல்லாம் கைமீறிப் போனது. எல்லோரும் பயத்தில் உறைந்து போகும் போது அவன் மட்டும் மன உறுதியோடு நின்றான். கடை-சியில், எல்லாம் அமைதியாகப் போ-னது. அவர்களின் குருட்டு நம்பிக்கைகள் அத்தனையும் பொய்யாகிப் போ-னது. அந்த நாள் அவளின் மனதின் ஆழத்திலிருந்து வெளியே வந்தது. எண்ணற்ற மலர் வளையங்கள், உறைநது போன மனங்கள், வற்றிப்போன கண்கள், ஏராளமான கருப்பு உடைகள், கை குலுக்கல்கள், அணைப்புகள். யாருக்கும் என்ன சொல்வதென்று தெரியவில்லை.

நாட்கள் உருண்டோடின. சுற்றியிருந்தோர் மனதிலிருந்து அவளைப் பற்றிய எண்ணங்கள், வேலைகள் குறைந்தன. காலமே சிறந்த மருந்து என்று நினைத்தார்கள். ஆனால் அவளது உறக்கம் இல்லாத இரவுகளும், கண்ணீரில் தோய்ந் தலையணையும் அவர்களுக்கு தெரியாமல் போனது.

அவளது ஒரே ஆறுதல், இந்த மின்னும் ஒற்றை நட்சத்திரமே. ஒவ்வொரு இரவும், அதனுடன் அவள் பேசும் வார்த்தைகள், "நீதான் என் வாழ்வின் வசந்தம்".

~ஆரபி மதியழகன்~


எங்கள் குடும்பம்
மிருணா
அம்மா
அப்பா
மிருணா
அப்பம்மா
மிசாரா
அப்பப்பா

# பெற்றோரைப் பேணுவோம்

உலகில் எல்லாவற்றையும் விட தாய் தந்தையரே மேலானவர்கள் என்பதை நடைமுறையில் உள்ள பழ மொழிகள் மூலமாகவும், நடைமுறை வாழ்க்கையின் உதாரணங்கள் மூலமாகவும், நாம் என்றும் காண்கின்றோம்.

எம்மை இவ்வுலகில் பெற்றிட எமது பெற்ரோர் எத்தனையோ பல துன்பங்களை சந்தித்து இருப்பார்கள்.

பல கோயில்களில் நேர்த்திக்கடன் வைத்து, பிள்ளைகளை கொடிய நோய்களை அணுகவிடாமல் காத்து இவ்வுலகில் எம்மை ஈன்றெடுத்த பெற்றோரை எமது வாழ்நாளில் எந்தொரு சந்தர்ப்பத்திலும் மறவாது பேணிப் பாதுகாப்பது பிள்ளைகளாகிய எமது தலையாய கடமையாகும்.

நம் குழந்தை பருவம் முதல் பெரியவர் ஆகும்வரை எம்மை ஒரு நல்ல நிலைக்கு கொண்டு வருவதற்காக எமது பெற்றோர், தமது சுக துக்கங்களை தியாகம் செய்து எமது நலனுக்காக பாடுபடுகின்றார்கள். அவர்களை நாம் நன்றி மறவாதவர்களாக பாதுகாக்க வேண்டும்.

"தாயில் சிறந்ததொரு கோயிலும் இல்லை
தந்தை சொல்மிக்க மந்திரம் இல்லை"

எமது பெற்றோர்களே முதற் தெய்வங்கள். அவர்களது சொற் கேட்டு அவர்களது குறிப்பறிந்து நாம் செயற்பட வேண்டும். அவர்களுடன் எப்போதும் அன்பாகவும் பண்பாகவும் மதிப்புகொடுத்து உயர்ந்த ஸ்தானத்தில் வைத்து நாம் நடக்க வேண்டும். எமது கடமை: பெற்றோரை அவர்களது கடைசி காலம் வரை எம்முடன் வைத்து வாழ வேண்டும்.

**– துவாரகன் சந்திரன் –**

## அல்பேட் அயன்ஸ்டீன்

அல்பேட் அயன்ஸ்டீன் ஒரு பிரபலமான விஞ்ஞானி. இவர் ஜேர்மனியில் 1879ம் ஆண்டு பிறந்தார். இவர் சிறுவயதில் கல்வியில் அதிகம் கவனம் செலுத்தவில்லை. 1921ம் ஆண்டு இவர் நோபல் பரிசை வென்றார். இவர் பல புதிய கண்டு பிடிப்புகளை உலகிற்கு அறிமுகமாக்கி பிரபலமானார். இவர் 1995ம் ஆண்டு, 76 வயதில் மரணமடைந்தார்.

அக்ஷனா விசாகன்

# அழகு தமிழ் பேசிடுவோம்

அன்புக் குழந்தைகளே
அனைவருமே கேளுங்கள்
அன்னைத்தமிழ் மொழியில்
அனைவருமே பேசிடுவோம்

பள்ளிக்குச் சென்றுநீர்
படித்தாலும் ஆங்கிலத்தை
பாலூட்டும் தாயினிடம்
பசுந்தமிழில் பேசிடுவீர்

தாய்ப்பாலைக் குடித்துநிதம்
தான்வளர்ந்து நிற்கின்றோம்
தமிழ் மொழியில்பேசிவிடின்
தலைநிமிர்ந்து நிற்போமே

அப்பாவென அழைப்போம்
அரவணைப்பார் ஆசையுடன்
டாடிஎன அழைக்கின்
வாடிவிடும் முகவர்க்கு

மடிமீது வைத்தெம்மை
மயக்குமொழி பேசிநிற்கும்
மாண்புமிகு அம்மாவை
மம்மியாய் ஆக்காதீர்

அன்புக் குழந்தைகளே
ஆங்கிலத்தைப் படியுங்கள்
அதேவேளை தமிழ்மொழியை
அணைத்துமே நின்றிடுவீர்

பிறந்தநாள் நிகழ்ச்சிகளில்
பேசுங்கள் தமிழ்மொழியில்
பெற்றவரும் உற்றவரும்
பெருமையுடன் பார்ப்பார்கள்

வெளியிலே ஆங்கிலத்தை
விட்டெறிந்து பேசுங்கள்
வீட்டிலே அன்னைமொழி
விரும்பியே பேசிடுவீர்

எங்குநாம் வாழ்ந்தாலும்
என்றுமே தமிழர்நாம்
என்கின்ற எண்ணமதை
எள்ளளவும் மறக்காதீர்

வென்றதமிழ் வீரத்தமிழ்
வியந்துலகு போற்றுந்தமிழ்
அந்தமொழி எங்கள்மொழி
அதையுணர்ந்து நிற்போமே

அழகுதமிழ் பேசிடுவோம்
அன்போடு நடந்திடுவோம்
ஆண்டவன் துணையிருப்பான்
ஆனந்தமாய் இருப்போமே

ஜ எம். ஜெயராமசர்மா .... மெல்பேண்

# மண்டலாய் அப்புவின் நினைவுகளில்....

அவன் சில காலமாக எதிர்பார்த்திருந்த வேறொரு நாட்டிற்கான வேலை மாற்றம் கடந்த வருடம் கிடைத்தபோது அவனால் நம்பவே முடியாமல் இருந்தது. ஏனென்றால், அவன் வேலை செய்யப்போகும் அந்த ஆசிய நாட்டிற்கு முன்னொரு காலத்தில் எம் மூதாதையர் பலர் காலனித்துவகால ஆங்கிலேயர்களுடன் பல்துறைசார் வேலைகளுக்காக சென்றிருந்தார்கள். பின்னர் இரண்டாம் உலக யுத்தத்தாலும் அந்த நாட்டில் ஏற்பட்ட இராணுவ ஆட்சியாலும் அங்கிருந்து வெளியேறினார்கள் என்பதுடன், மூன்று தசாப்தங்களிட்கு முன்பு சந்தித்த மெலிந்த உருவுள்ள ஒரு முதிய மனிதரையும் அவன் மனக்கண் முன் நிறுத்தியது.

மேலும் ஒரு பதினைந்து வருடங்களிட்கு முன்பும் அவன் வேலை செய்த நிறுவனம் தொழில் நிமித்தமாக அவனை அந்த நாட்டிற்கு அனுப்ப முடிவு செய்தபோதும் அங்குநிலவிய இராணுவ ஆட்சியால் அவனால் அங்கு போகமுடியாதிருந்தது. அப்போது அவன் அந்த நாட்டின் வரலாறு, தேசிய இனங்கள், பூகோள அமைவிடம், மற்றும் அதன் பிராந்தியமாகாணங்கள் பற்றியும் அங்கு மண்டலாய் (Mandalay) ஒரு என்று மாகாணம் உள்ளதையும் அறிந்துகொண்டான். அச்சமயம்தான், ஏன் அந்த மனிதரை "மண்டலாய்அப்பு" என்று அவரது அயலவர்கள் அழைத்தார்கள் என்பதை அவனால் ஊகிக்க முடிந்தது.

முப்பது வருடங்களிட்கு முன் அவனுள் சில அரச அறிவியல் நூல்களை வாசிக்க வேண்டுமென்ற ஆர்வமெழுந்தபோது சில நண்பர்கள் அந்த மனிதனின் வீட்டில் அவன் தேடும் புத்தகங்கள் உள்ளதென்று சொன்னார்கள். அப்போது அந்த மனிதனின் பெயர் மண்டலாய் அப்பு என்றும் பர்மாவிலிருந்து வந்தவர் வாய்பேசமாட்டார், ஆனால் யாரும் கதைத்தால் எழுத்தில் பதில் தருவார் என்றும் சொல்லியிருந்தார்கள். பின்னர் ஒரு நாள்அந்த மனிதரிடமுள்ள புத்தகங்களை வாசிக்க அவன் ஆவலாக இருப்பதை தாங்கள் அவருக்குத் தெரியப்படுத்திவிட்டதாகவும் அவனுக்கு அவனது நண்பர்கள் கூறினார்கள்.

அந்தக்காலத்தில் அவனது பாடசாலை நாட்டில் நிலவிய சூழ்நிலையால் அந்த மனிதரின் கிராமத்திற்கு இடம்பெயர்ந்து இயங்கிக்கொண்டிருந்தது. இது அந்த மனிதரின் வீட்டிற்குபோவதற்கு அவனுக்கு மிகவும் வசதியாக இருந்தது. முதல் நாள் அவன் அங்குசென்றபோது மண்டலாய் அப்பு தனது வளவின் முற்றத்தை கூட்டிக்கொண்டிருந்தார். பாடசாலை சீருடையில் வந்தவனை வியப்புடன் பார்த்து சைகையால் அவனை வரவேற்று, புத்தகங்கள் இருந்த இடத்திற்கு கூட்டிச்சென்று காண்பித்தார். அது ஒரு சாமி மாடம். அவரது வீடு ஒரு சிறிய படுக்கையறை, விறாந்தை, ஒரு மேசையுள்ள சமையலறை கொண்டதுமட்டும்தான். ஒரு துண்டு வெற்றுக் காகிதத்தில் எப்போது வந்து எந்தபுத்தகத்தையும் எடுத்து வாசிக்கலாம்.

மேலும் புத்தகங்களை வெளியே கொண்டு செல்வதென்றால் என்ன புத்தகம் எடுத்தது, எப்போது திரும்பி கொண்டுவரப்படும் என்று எழுதிவைக்கவும் என்று எழுதிக்காட்டினார். அந்த வாசிப்பு பழக்கம் சுமார் மூன்றுவருடங்கள் தொடர்ந்தது. எப்போதும் விபூதி சந்தணத்துடன் ஒரு பழைய நாலுமுழ வெள்ளை வேட்டி அணிந்து எளிமையான ஒரு மனிதராக வாழ்ந்தார்.

மேலும் தனதுவீட்டிற்கு அண்மையில் உள்ள பிள்ளையாரை அவர் வணங்கி வருவதையும் அவன் அவதானித்திருந்தான். ஆனாலும், அவன் அவரிடம் அவரைப்பற்றி கேட்கவில்லை. அவனது நண்பர்களும் அவரைப்பற்றி மேலதிகமாக எதுவும் சொல்லவில்லை. குறிப்பாக அவர் ஏன் கதைப்பது இல்லை என்றுகூடச் சொல்லவில்லை. அவனது இளம்வயது யாரிடமும் மண்டலாய் அப்பு பற்றிக்கேட்கும் தைரியத்தையும் அவனுக்குள் ஏற்படுத்தவில்லை. இது அவரைப்பற்றி அறியாது விட்டோமே என்ற ஒருகவலையான பதிவாக அவனுள் இன்றுவரை இருக்கிறது. அத்துடன் அந்த காலத்தில் வாசித்த புத்தகங்களின் தாக்கம் இப்போதும் அவனில் இருந்துகொண்டேதான் இருக்கிறது. இதனால், அதன் பிறகு அவன் உயர்கல்விக்காக ஊரைவிட்டுப்போய் பின்னர் நாட்டைவிட்டே புலம்பெயர்ந்திருந்தாலும் மண்டலாய் அப்பு இடைக்கிடை அவன-துநினைவுகளில் வந்துபோயிருக்கிறார். ஆனாலும், அவர் முன்பு வாழ்ந்து வேலை செய்தநாட்டிற்கு தானும் போகப்போகிறேன் என்ற நினைப்பு அவனை முப்பது வருடங்களிற்குமுந்திய ஒரு பதின்மவயது சிறுவனின் மனநிலைக்கு இட்டுச்சென்றது.

பின்னர், அவன் தனது வேலைக்காக பர்மாவிற்கு போய், மண்டலாய் என்றமாகாணத்திற்கும் போனான். அப்போது, அந்த மாகாணம் பர்மாவில் ஒரு மிகவும்வளர்ச்சியடைந்த மாகாணமாகவும், பர்மாவின் கடைசி மன்னனை ஆங்கிலேயர் தோற்கடித்து கைதுசெய்த இடமாகவும், அந்த கடைசி மன்னனின் பாரிய அரண்மனை பராமரிப்பற்று இருந்ததையும் பார்த்து பிரமித்தான். ஆங்கிலேயர் காலத்தில், மண்டலாய்அப்பு இந்த மாகாணத்தில் என்ன செய்திருப்பார், எப்படி வாழ்ந்திருப்பார் என்பதுடன் அப்போதும் யாருடனும் கதையாமல் வெற்றுக் காகித துண்டில் தான் எழுதிக்காட்டி இருப்பாரோ என்று யோசித்தான்.

மூன்று தசாப்தத்துக்கு முன்பு அவன் சந்தித்த முதியவரான மண்டலாய் அப்பு இப்போது இறைவனடி சேர்ந்த்திருப்பார் என்று அவனது அடி மனது சொன்னது. இருந்தாலும் அடுத்தமுறை ஊருக்குப் போகும்போது நிச்சயமாக மண்டலாய் அப்புவின் அந்த வீட்டைப்போய்ப்பார்ப்பது என்றும் திட்டமிட்டான். அவனது சிந்தனையில், மண்டலாய் அப்புவைப்பற்றியும், அவர் எப்போது மண்டலாய் போனார், எப்போது ஊர் திரும்பினார்,அவரது சொந்தப் பெயர் என்ன, உற்றார் உறவினர் யார், ஏன் தனிமனிதராக வாழ்ந்தார், அவரது புத்தகங்கள் எங்கே, மேலும் அவரது வாய்பேசா விரதம்பற்றியும் பல வினாக்கள் உதித்தன.

அவரது அயலவர்களிடமோ அல்லது அவரை அவனுக்கு அறிமுகம் செய்த புலம்பெயராதிருக்கும் நண்பர்களிடமோவாவது விசாரித்து அறிவது என்றும் திடமாக முடிவுசெய்தான். அவனது மனதில் நிரந்திரமாகவுள்ள மண்டலாய் அப்புவின் நினைவுகளுடன் மண்டலாயிலிருந்து தான் வேலை செய்யும் பர்மாவின் தற்போதைய புதிய தலை நகரமான Nay Pyi Taw வை நோக்கிப் புறப்பட்டான்.

-மங்களன்-

பிற்குறிப்பு:
இக்கதை ஒரு உண்மைச் சம்பவத்தை மையமாக கொண்டது. மண்டலாய் அப்பு, பருத்தித்துறைக்கு அண்மையில் உள்ள புற்றளை பிள்ளையார் கோவிலை அண்டியபகுதியில் எண்பதுகளில் வாழ்ந்தவர். பர்மா இப்போது மியன்மார் - Myanmar என்று அழைக்கப்படுகிறது. முன்பு பர்மாவின் பழைய தலை நகரம் Rangoon என்றுஅழைக்கப்பட்டது. இப்போது அந்த பிராந்தியம் Yangon என்று அழைக்கப்படுகிறது.

---

# இதுதான் விதியா?

அலுமாரியிலே
அடுக்கடுக்காய்
பட்டாடைகளை
அடுக்கி வைத்து
எடுத்து எடுத்து
உடுத்து மகிழ்கிறாள்
இந்த நாட்டிலே

மாற்றிக் கட்ட
துண்டில்லையே என
மனது துடிக்கிறார்
நம் சொந்த நாட்டிலே

ஒட்டி உலர்ந்த
வயிற்றுடன்
ஒரு நேர உணவுக்கு
வழியின்றி அலைகிறார்
நம் சொந்த நாட்டிலே

என்ன சாப்பிடலாம்
என்று எண்ணி எண்ணியே
வகை வகையாய்
உணவு தேடி
உண்டு கழிக்கிறார்
இந்த நாட்டிலே

**இதுதான் விதிப்பயனா?**
**சிவகாமசுந்தரி சதாசிவம்பிள்ளை**

# வீரத்தின் விளை நிலம்

இயற்கை என்னும் இளைய கன்னி துள்ளி விளையாடி களிநடம் புரியும் கிராமம்தான் மலையூர். திரும்பிய பக்கமெல்லாம் பச்சைப்பசேல் எனக்காட்சி தரும் வயல் வெளி, நீர் வளம் நிறைந்த ஏரிகள் அடர்ந்து வளர்ந்த மரங்கள், காணும் இடமெல்லாம் கவின் மிக்க பூ மரங்கள். இங்கு வாழும் மக்களும் கள்ளங்கபடமில்லாத நிறை மாந்தர். இத்தகைய சிறப்புடன் விளங்கிய இக்கிராமத்து மக்களின் வாழ்க்கையில் தாங்கமுடியாத பேரிடிபோல ஆறாத துயரம் ஏற்பட்டது.

நாட்டில் ஏற்பட்ட அசாதாரண சூழ்நிலை அக்கிராமத்திலும் பிரதி பலிக்கலாயிற்று. தாங்க முடியாத எறி-கணை வீச்சும், காதைப்பிளக்கும் துப்பாக்கி வேட்டும் மக்களை அக்கிராமத்தை விட்டே ஓடச் செய்தது. செல்வச் செழிப்புடன் வாழ்ந்த அக்கிராமத்து மக்கள் வறுமையின் கோரப் பிடியில் சிக்கித் தவித்து அகதிக-ளாக இடம் பெயர்ந்தனர். எத்தனையோ இன்னல்களை அனுபவித்து, பிரச்சனை ஓய்ந்த பின்னர் மீள் குடியேற்றம் என்ற பெயரில் திரும்பியும் தாம் வாழ்ந்த கிராமத்திற்கு வந்து சேர்ந்தனர்.

அங்கு வந்து அவர்கள் கண்டகாட்சி அவர்கள் உள்ளத்தையே வாட்டி வதைத்தது. செழிப்புடன் காட்சி தந்த இடங்கள் எல்லாம் காய்ந்து வரண்டு கட்டாந் தரைகளாகவும் பூத்துக் குலுங்கிய பூஞ்சோலைகள் எல்லாம் காய்ந்த சருகுக-ளாகவும் திரும்பிய பக்கம் எல்லாமே இடிந்த கட்டிடங்களாகவும் காணப்பட்டன. "தெய்வமே! இது நாம் வாழ்ந்த பூமியா? ஏன் எங்களுக்கு இப்படி ஒரு சோதனை?" என மக்கள் புலம்பலாயினர். எவ்வளவு காலம்தான் புலம்புவது. மீண்டும் புதுத்தெம்புடன் கடின உழைப்பால் ஓரளவு பழைய நிலைக்கு தம் கிராமத்தை மீட்டெடுக்க அயராது பாடுபட்டனர். இருப்பினும் முன்னைய செழிப்பும், வளமும் கிடைப்பது அரிதாயிற்று.

பாதுகாப்பு என்னும் பெயரில் இராணுவத்தின் அடாவடித் தனமும், கெடுபிடியும் மேலும் மக்களை அச்சுறுத்தலாயிற்று. அதிலும் இளம் பெண்களின் நிலை மிகவும் மேசமாயிற்று. நினைத்த நேரத்தில் சோதனை என்னும் பெயரில் வீட்டினுள் நுழைவது, ஆண் துணை இல்லாமல் வாழும் பெண்களின் வீடுகள்தான் அதிகம் சோதனைக் களமாக இருந்தது. இதனால் இரவு நேரங்களில் அயலவர் வீடுகளில் அநேகமானோர் சென்று தங்க வேண்டியதாயிற்று. அதிலும் புதிதாக அக்கிராமத்திற்கு வந்த இராணுவ அதிகாரியோ பெண்கள் விடயத்தில் மிகவும் கெட்டவன். இளம் பெண்களைக் கண்டால் போதும் அவர்களது இருப்பிடம் நாடி வரத்தொடங்கினான். அக்கிராமத்து இளம் பெண்கள் கூடியவரையில் அக் காமுகனின் கண்களில் தென்படாமல் மறைந்து வாழத்தொடங்கினர். அவர்களது அஞ்ஞாத வாசத்திற்கு முடிவு கட்டும் வகையில் ஒரு சம்பவம் நடந்தது.



சென்று மறைந்திருக்கும்படி கெஞ்சினாள். ஆனால் பாவனாவோ, "அம்மா நீங்க பயப்படாதீங்க. என்னதான் நடக்குதென்று பார்ப்போம்" எனக் கையில் கத்தியுடன் இளநீரைச் சீவிக்கொண்டிருந்தாள். தூரத்திலேயே ஜீப் வண்டியை நிறுத்திவிட்டு தனக்குக் காவல-ாக வந்தவர்களையும் அவ்விடத்திலேயே நிற்கும்படி கூறிவிட்டு அந்த இராணுவ அதிகாரி பாவனாவை நோக்கி வந்தான்.

பாவனாவின் தாய், "ஐயா என்ர மகளை ஒன்றும் செய்திடாதீங்க" என்று அலறிக்கொண்டே அவனின் காலில் விழுந்து கதறி அழுதாள். "ஏய் கிழவி சும்மா அங்கால போ" என்று அரை குறை தமிழில் கூறியபடியே தாயைக் கால-ால் எட்டி உதைத்த இராணுவ அதிகாரி பாவனாவை நோக்கி "என்ன புள்ளே! நீ இவ்வளவு காலமும் என்ர கண்ணில் பட-ாமல் எங்க இருந்த" என்று கேட்டபடியே பாவனாவை நெருங்கினான். என்ன செய்வதென்று அறியாத பாவனா, கையில் கத்தியுடன் கற்சிலைபோல அசையாது நின்றாள். ஒரு கணப்பொழுதில் அவளது மனதில் இந்த எண்ணம் தோன்றியது. "பாவி மகன், எத்தனை பெண்களின் வாழ்க்கையைக் கெடுத்து, அவர்கள் வாழ்வில் மண்ணை அள்ளிப் போட்டவன்.

பாவனா! ஆம் பெயருக்கு ஏற்றமாதிரி ஏழ்மையான சூழலிலும் அழகிய ரதம் போல காண்போரைக் கவரும் கட்டழகியாக அக்கிராமத்தில் வாழ்ந்த இளம் பெண். நாட்டில் இடம்பெற்ற வன் செயலால் தந்தையை இழந்து, தாயும் மகளுமாக அங்கிருந்த ஒரு தென்னந் தோட்டத்தில் கூலி வேலை செய்து சீவியம் நடத்தி வந்தனர். பாவனா இயல்பாகவே நெஞ்சுரமும், தைரியமும் மிக்க பெண்ணாக விளங்கினாள். தாயும் மகளும் அத் தோட்டத்திலேயே குடிசை அமைத்து வாழ்ந்து வந்தனர். ஊருக்கு ஒதுக்குப் புறமாக இருந்ததனால் அவ்விடத்தில் ஆள் நடமாட்டம் குறைவாகவே இருந்தது.

அன்று சனிக்கிழமை. தோட்டத்தில் பறித்துப் போட்ட தேங்காய் இளநீர் குலைகளை தாயும் மகளும் வெட்டி பிரித்து அடுக்கிக்கொண்டிருக்கையில், திடீரென்று இராணுவ ஜீப் வண்டி ஒன்று வரும் சத்தம் கேட்டது. பவனாவின் தாய் பதறியடித்தவளாய், மகளைக் கடிசையில்

இவனைப் போன்றவர்கள் இந்த உலகத்தில் வாழ்வதே பாவம். நான் செத்தாலும் பரவாயில்லை, இவனுக்கு ஒரு முடிவு கட்டத்தான் வேண்டும்" என்று நினைத்தவளாய், சுய உணர்வு பெற்றவளாக அவனை நோக்கிச் சிரித்தபடியே "சேர்! நீங்க சரியா களைத்துப் போய் வந்திருக்கிறீங்க, முதலில் இந்த இளநீரைக் குடியுங்கள" எனக் கையிலிருந்த கத்தியால் இளநீரைச் சீவிக் கொடுத்தாள்.

அதைக் கையில் வாங்கியபடியே "இந்த ஊரில் நீதான் புத்திசாலிப் பெண்ணாக இருக்கின்றாய், மற்றப் பெண்கள் எல்லாம் என்னைக் கண்டதும் ஓடி ஒளிகின்றார்கள். உன்னைப்போல எல்லோரும் இருந்தால் எவ்வளவு சந்தோஷம" என்று சிரித்தபடி கூறியவாறு இளநீரை வாங்கி அண்ணாந்து குடிக்கத் தொடங்கினான்."ஓமடா!

சந்தோஷம்தான்" எனக் கூறியபடியே பாவ-னா கண்ணிமைக்கும் நேரத்தில் கூரிய கத்தியால் அவனது கழுத்தில் ஓங்கி ஒரு வெட்டு வெட்டினாள்.

"ஐயோ" என்று கதறியபடியே நிலத்தில் விழுந்து துடி துடித்த அதிகாரியின் உடல் கொஞ்ச நேரத்தில் அடங்கிப் போனது. காலனுக்குக் காலனான அவன் கால-னை நோக்கிப் பயணமானான். நடந்த சம்பவத்தைக் கண்ட அவனுக்குக் காவல-ாக வந்த இராணுவ வீரர்கள், கத்தியபடியே பாவனா நின்ற இடத்தை நோக்கி ஓடிவரல-ாயினர்.

இந்தக் கயவர்களின் கையில் அகப்பட்டு சீரழிவதைக் காட்டிலும் நான் வீர சொர்க்கம் அடைவது மேல் என எண்ணியபடி "அம்மா! என்னைப் பெத்தவளே, என்னை மன்னித்துவிடு, எனக்கு இது தவிர தப்புவதற்கு வேறு எந்த மார்க்கமும் இல்லை. உன்னைக் கடவுள் கைவிட மாட்டார" என மயங்கியநிலையில் இருந்த தாயைப் பார்த்தவண்ணம் நினைத்தபடியே, கையிலிருந்த கூரிய கத்தியை தன் மார்பில் பாய்ச்சி அவ்விடத்திலேயே துடிதுடித்து இறந்தாள்.

செய்தியைக் கேள்விப்பட்ட அக் கிராமத்து மக்கள் எல்லோரும் அவ்விடத்தில் வந்து கூடினர். நடந்த சம்பவத்தை அறிந்த அவ்வூர் பெண்கள் "அம்மா தாயே எம் மானம் காத்த தெய்வமே நீ மறைந்தாலும் உன் நினைவு எம்மை விட்டு அகலாது. உண்மையில் நீ எங்கள் காவல் தெய்வம் தாயே" என மனமுருகிக் கண்ணீர் வடித்தனர்.

அதன்பின் அக் கிராமத்திற்கு வரும் இராணுவ அதிகாரிகள் அங்குள்ள மக்களிடம் குறிப்பாகப் பெண்களிடம் மரியாதையாக நடக்கலாயினர். இன்றும் பாவனா என்னும் பெயரைக் கேட்டால் அக்கிராமத்து மக்கள் கையெடுத்து கும்பிடும் அளவிற்கு...

"வீரத்தின் விளை நிலமாய்
கற்பின் கனலானாள் பாவனா"

**திருமதி. கலா சிவகுமாரவேலு**

# சுகமான சுமைகள்

சிங்கை நகரிலிருந்து ஆஸிக்கு குடிபெயரப் போகும் நாளை நினைத்து என் மனம் ஆகாயத்தில் பறந்தது. நாம் விமானத்தில் பறக்கும் நாளும் வந்தது. அப்பா, அம்மா, நான், தம்பி எல்லோரும் கனத்த மனதுடனும், சுமையான பிரயாணப் பைகளுடனும் விமான நிலையம் விரைந்தோம். நான் தவழ்ந்து வளர்ந்த சிங்கை நகர் என் கண்ணை விட்டு மெல்ல மெல்ல மறைந்தது. மெல்போன் நகரில் கால் பதித்தோம். புதிய இடம், புதிய மனிதர்கள், கடுங் குளிர், கண் இமைக்கும் நேரத்தில் விரையும் வாகனங்கள் எல்லாம் என் மனதில் புதிய அனுபவங்களாகப் பதிந்தன. என் பழைய நண்பர்களைப் பிரிந்து புதிய பள்ளியில் புதிய நண்பர்களுடன் மெல்ல மெல்லப் பழகிக் கொண்டேன். தினமும் காலை எழுந்தவுடன் அப்பாவும் அம்மாவும் வேலை, நானும் தம்பியும் பள்ளி என எமது வாழ்க்கைச் சக்கரம் இயந்திரம் போல் உருண்டது. நம் பெற்றோர் ஓடி ஓடி கடுங் குளிரில் உழைப்பது யாருக்காக? எதற்காக? பிள்ளைகளின் எதிர்கால வாழ்வு இனிதே அமைய வேண்டும் என்பதற்காக. எனவே, நாம் கல்வியை சுமையாக நினைக்காமல் நன்றாக கற்க வேண்டும். நம் பெற்றோருக்கு கடுங் குளிர், வேலைக்களைப்பு எல்லாம் பிள்ளைகளுக்காக சுகமான சுமைகள் தான்.

கி.விக்கிரம்
வகுப்பு 2

# தூங்காத இரவு வேண்டும்...

கோமளா சிவலிங்கத்தைப் பார்த்து சன்னமாக கேட்டாள். குரல் எழவில்லை.

**"கண்ண...ன் ஒழு...ங்கா சா..ப்பிட்ட..வனா?"**

சிவலிங்கம் பதில் சொல்லவில்லை. மெதுவாக கோமளாவின் தலையை தடவிக் கொடுத்தார். அவளிடத்தில் பெரிதாக சலனமில்லை. முடி எதுவும் இல்லாத தலை. நெற்றியில் குட்டி குங்குமம். கண்கள் சற்று செருகியிருந்தன. முகம் கொஞ்சம் உள்ளே ஒடுங்கியிருந்தது. சொண்டு வெடித்து, கொஞ்சம் வெளிறி, கடைவாயில் சின்னதாக மாறவேமாறாத அந்தச் சிரிப்பு, கோமளா அந்த அயர்ச்சியிலும் அழகாக இருந்தாள் போன்றே தோன்றியது. காலையில்தான் தாதியர் அவளை குளிப்பாட்டியிருந்தனர். ஆஸ்பத்திரியில் நோயாளருடைய கவுண் அணியமாட்டேன் என்று அவள் அடம்பிடித்ததால், சிவலிங்கம் வீட்டிலிருந்து ஒரு சோட்டியை எடுத்து வந்திருந்தார். வெள்ளைக்கலரில் சின்ன சின்ன பூப்போட்ட சோட்டி. பெரியாஸ்பத்திரி வார்டில் கண்ணன் பிறந்த சமயமும் கோமளா இப்படி ஒரு சோட்டியையே அணிந்திருந்தாள். இந்த இருபது வருடங்களில், இவ்வளவு வருத்தம் வந்தபிறகும், கோமளா அப்படியொன்றும் பெரிதாக மாறிவிடவில்லை. சிவலிங்கம் அவரையறியாமலே தனக்குள் புன்னகை செய்தார். கதிரையை இழுத்து அருகில் போட்டுக்கொண்டு சுந்தரகாண்டத்தை கையில் எடுத்தார். முன்னைய இரவு நிறுத்திய இடத்திலிருந்து தொடர்ந்தார்.

**"மெய்த்ததாதை விரும்பினன் நீட்டிய**
**கைத்தலங்களை,கைகளின் நீக்கி, வேறு**
**உய்த்த போது,தருப்பையில் ஒண் பதம்**
**வைத்த வேதிகைச்செய்தி மனக் கொள்வாள்''**

**''என்னவாம்... சீதை அசோகவனத்தில இருக்கிறாவல்லோ, அவவுக்கு பழைய ஞாபகங்கள் வந்திட்டுது.மிதிலைல இராமனை கண்டது முதல் கலியாணவீட்டில நடந்தது எல்லாம்...''**

புத்தகத்தை வாசித்து, பொருள் விளக்கம் சொல்லிக் கொண்டிருக்கையில், கோமளாவின் முனகல் சத்தம் கேட்கவே, சொல்லுவதை நிறுத்திவிட்டு திரும்பிப்பார்த்தார். ''ஒருக்களித்துப்படுக்கப்போகிறேன்'' என்று அவள் சைகை காட்ட, யன்னல் பக்கமாக, பக்குவமாக அவளைத் திரும்பிப் படுக்கவைத்தார். யன்னல் திரைச்சீலைகளை இரண்டுபக்கமும் இழுத்துச்செருகி, உள்ளே நன்றாக வெளிச்சம் பரவவிட்டார். இலையுதிர்காலத்தின் இறுதி மாதம் அது. வெளியே அடர்ந்து வளர்ந்த மாப்பிள் மரம் ஒன்று.

நன்றாக பழுத்துச் சிவந்த இலைகள் கொப்புகளில் இன்னமும் விழுந்தும் விழாமலும் ஒட்டிக்கொண்டிருந்தன. கலர்கலராய் சருகுகள் நிலமெங்கும் பரவிக்கிடந்தன. இரண்டு மூன்று வெள்ளைக்காரகுழந்தைகள் ஓடிப்பிடித்து விளையாடிக் கொண்டிருந்தனர். கோமளா யன்னலையே வெறித்துப் பார்த்தபடி படுத்திருந்தாள். சிவலிங்கம் மீண்டும் கதிரையில் வந்தமர்ந்து, விளக்கத்தை தொடர்ந்தார்.

**"தருப்பையில் ஒண் பதம்**
**வைத்த வேதிகைச்செய்தி மனக் கொள்வாள்"**

**"அங்கமணமேடைல அவளிண்ட காலை இராமன் இவளுக்கு மெட்டி போட்டுவிட்டது ஞாபகம்வருது. இப்பிடியெல்லாம் செய்தவன் ஏன் இன்னும் வந்து மீட்டுக்கொள்ளேல்ல? எண்ட கவலை அவளுக்கு .."**

கோமளா தூங்கிவிட்டாள்.

இந்தத்தடவை கொஞ்சம் சீரியஸாகவே நோய் முற்றிவிட்டது. இரண்டு வாரங்களாக கோமளாபடுத்த படுக்கையில்தான். தீராத நோய்கள் மாறி மாறி வந்து கடந்த ஐந்துவருடங்களாக துரத்தியடிக்கிறது. ஒரு மனிதனுக்கு ஒரு நோய் வந்து துன்புறுத்தலாம். இரண்டு நோய்கள் வரலாம். நோய் மாறி நோய் தொடர்ந்து வந்துகொண்டிருந்தால் என்ன செய்வது? கர்ப்பப்பையில் ஆரம்பித்தது.அகற்றி ஆறு மாதங்களுக்குத்தான் ஓய்வு. அடுத்ததாக சிறுநீரகத்தில் சிக்கல். ஒன்று போனது. நான்கே மாதங்களில் மற்றயதும் பழுதடைய, சிறுநீரக மாற்று அறுவைசெய்யவேண்டி வந்தது. அதற்குப்பிறகு பிரச்சனை இல்லை என்று வீடு வந்து இரண்டுமாதம்கூட ஆகவில்லை. இந்தமுறை கல்லீரல். வந்தது புற்றுநோய். அந்தப்பெயரைக் கேட்ட அக்கணமே அந்த இளம் குடும்பம் நிலநடுக்கத்தில் அதிரும் வீட்டைப்போல ஆடிப்போனது.

சிவலிங்கம், கோமளா, கண்ணன் என்ற சின்ன முக்கோணம் அவர்களுடையது. அதில் ஒரு புள்ளியை திடீரென்று இல்லை என்றால் முடியுமா? எப்படியும் குணப்படுத்தியே தீருவதென சிவலிங்கம் சங்கல்பம் பூண்டார். பயோப்சி, ஹீமோ, அக்கிரஷன், எண்டோஸ்கோபி என்ற புதுவார்த்தைகள் நாளாந்தம் கேட்டு கேட்டு பழக்கமாயின. வைத்தியசாலை வீடானது. வீடு விடுதியானது. கோயில்களில் அரச்சகர்களுக்கு கோமளா-வின் நட்சத்திரம் மனப்பாடமானது. நல்லூர் தேரன்று பிரதட்டை செய்வதாக வேண்டுதல் வைக்கப்பட்டது. இரண்டு மாதங்கள். படாதபாடு, ஓயாத அலைச்சல். ஒருநாள் பட்ட கஷ்டத்துக்கு கொஞ்சம் பலன் கிடைக்குமாப்போல. கோமளா தேறிவிட்டாள். ஹீமோ வேலை செய்துவிட்டது. இனிப்பரவாயில்லை. வீட்டுக்கு கொண்டுபோகலாம் என்று சொல்லிவிட்டார்கள்.சிவலிங்கம் ஆஸ்பத்திரியில் நின்றவாறே நல்லூரானுக்கு மருமகனிடம் சொல்லி அர்ச்சனை செய்வித்தார்.

வீடு போகும் வழியில் கரம்ஸ்டவுண் சிவா விஷ்ணுகோவிலில் இறங்கி இரண்டு கடவுள்களுக்கும் பூசை செய்தார்கள்.

வீட்டுக்கு வந்த கோமளாவை ஒரு இடத்தில் இருத்திப் பார்க்க முடியவில்லை. ஆறுமணி குளிரில் எழுந்து கண்ணனுக்கு சாப்பாடு செய்து கொடுப்பாள். சிவலிங்கத்துக்கு டீ. ''வேண்டாம் சும்மா இரு'' என்றால் ''எனக்குத்தானே வருத்தம் மாறீட்டுதே'' என்று சிரிப்பாள். அவள் சிரிப்பு. கையைக்கட்டி, தலையை நன்றாக சரித்து, கொஞ்சம்முதுகு கூனிக்கொண்டு, அவள் சிரிக்கும்போது தலை வானத்தையும் பூமியையும் மாறிமாறி பார்க்கும். அப்படிச்சிரிப்பாள். சிவலிங்கத்துக்கு கண்கலங்கும். காட்டிக்கொள்ளமாட்டார். இவளை இயங்க விட்டால்தான் எந்த நோயும் அண்டாது என்றுநினைப்பார். பகல் பதி-னோரு மணிக்கு இருவரும் உட்கார்ந்து, யூடியூபில் மகாபாரதம் பார்ப்பார்கள். சிவலிங்கம் அன்றைக்கு பேஸ்புக்கில் யாரார் என்ன எழுதியிருக்கிறார்கள்? என்று வாசித்துக்காட்டுவார். இவள் நன்றாக இருக்கிறது என்று சொன்னால் லைக் பண்ணுவார்.

மதியம் சிவலிங்கம்தானே சமைப்பார். ஒரு சோறு, பத்தியக்கறி. அவித்த மரக்கறி. அவ்வளவுதான். இவர் பாடிப்பாடி சமைக்க, கோமளா சோபாவிலேயே தூங்கிவிடுவாள். இரண்டு மணிக்கு அவள் எழும்பியபிறகு, சாப்பாடு, கொஞ்சநேரம் பேச்சு. மீண்டும் தூ க்கம். குடிக்கும் மருந்துக்கு அவள் முழித்திருக்கும் நேரத்தைவிட தூங்கும் பொழு-துகளே அதிகம். மாலை ஆறுமணிக்கு எழுந்து, சாமியறைக்கு விளக்கு வைக்கவும், கண்ணன் வரவும் சரியாகவிருக்கும். எல்லோரும் டீ குடிப்பார்கள். இரவு உணவு இவர் சமைக்கப்போகிறேன் என்றால் முறைப்பாள். ''உங்கட சாப்பாட்ட மனிசன் சாப்பிடுவானா? எண்ட மகனுக்கு நான்தான் சமைப்பன்'' என்பாள். சிவலிங்கம் சிரிப்பார். சாப்பாட்டு மேசையில் மகனின் வேலைத்தள முறைப்பாடுகளை கேட்டபிறகு, படுக்கப்போவார்கள். இரண்டு மாதங்களுக்கு முன்னர், தனக்கு மீண்டும் இராமாயணம் படிக்கவேண்டும் போல இருக்கிறது என்று அவள் சொல்லவும், சிவலிங்கம் ஒவ்வொரு பாடலாக வாசித்து பொருள் விளக்கம் கொடுக்கத்தொடங்கினார். பாடல் விளக்கம்மட்டுமில்லாமல், அந்தக்காலத்தில் மேடைகளில் நடந்த சுவாரசிய சம்பவங்களும் சேர்ந்துவரும். அவரோடு முரண்டுபண்ணும் நாட்களிலோ, அல்லது தூக்கம் வந்துவிட்டாலோ கோமளா சிவலிங்கத்தின் வாயை அடைத்துவிடுவாள்.

**''அப்பா .. உங்களுக்கு இராமாயணமே தெரியாது.... எண்ட அண்ணை எண்டா எப்பிடிச்சொல்லும் தெரியுமா?''**

சிரித்துக்கொண்டே சிவலிங்கம் செல்லமாக அவள் தலையில் குட்டி தூங்கவைப்பார். அவளுக்கு பக்கவாட்டில் ஒருக்களித்துப் படுத்தால்தான் தூக்கம் வரும். இவர் தோளில்தலைசாய்த்தபடி, ஏதாவது பேசிக்கொண்டு அப்படியே தூங்கிவிடுவாள். இப்படியேஇருந்துவிடக்கூடாதா? என்று சிவலிங்கம் அனுதினமும் ஏங்குவார்.

ஒருநாள் காலையில் கோமளாவுக்கு ஸ்ட்ரோக் வந்துவிட்டது. சிறிது கண்ணயர்ந்திருந்த சிவலிங்கம் திடுக்கிட்டு விழித்தார். கோமளா இன்னமும் தூங்கிக்கொண்டிருந்தாள். நேரம் ஐந்துமணி. இருட்டிவிட்டது. எழுந்து யன்னல் திரைச்சீலைகளை இழுத்து மூடினார். அறையினுள் ஹீட்டர் போட்டிருந்தாலும் குளிர்ந்தது. போர்வையை இழுத்து கோமளாவின் தலையை போர்த்திவிட்டார். இன்னும் கொஞ்ச நேரத்தில் கண்ணன் வந்துவிடுவான். அவனை நிறுத்திவிட்டு வீட்டுக்குப்போய் குளிக்கவேண்டும். இரண்டு இடியப்பமும், சொதியும் வைத்தால், பாவம் அவனாவது கொஞ்சம் சாப்பிடுவான். கோமளாவுக்கு எல்லாமே தண்ணிச்சாப்பாடுதான். சேலைனில் ஏற்றவேண்டும். பெயர் தெரியாத சத்துள்ளதண்ணீர் என்கிறார்கள். ஆங்கிலப்பெயர்கள். சிவலிங்கத்துக்கு புரிவதில்லை.

இம்முறைவந்திருக்கும் நோய் தீராத நோய் என்று வைத்தியர்கள் சொல்லிவிட்டார்கள். ஸ்ட்ரோக் வெறுமனே வரவில்லை. புற்றுநோய் உடல் எங்கும் பரவியதன் விளைவு.திண்ம உணவு சாப்பிட்டால் செமிக்காது. மாஸ்க் இல்லாமல் மூச்சுவிட முடியாது.உடம்பை அடுத்தவர் உதவியின்றி அசைக்கமுடியாது. பேசக்கூட கஷ்டப்படுகிறாள். அடிக்கடி வலி தாளாமல் முனகுகிறாள். எங்கே வலி என்று சொல்லமுடியாது. இங்கேதான் என்றில்லாமல் எல்லா இடமும் வலி. மூளைக்கு மட்டும் இன்னமும் நோய் ஏறவில்லை. சொல்வதெல்லாம் புரிகிறது. ஆட்களை அடையாளம் காண்பாள். ஞாபகம் அபாரம். அன்றைக்கு திரிசடை-யை தவறுதலாக மண்டோதரி என்று சொல்லிவிட்டார். முறைத்துப்பார்த்தாள். கடவுளே இவள் எனக்கு வேண்டுமே. கண் கலங்கியபடி சிவலிங்கம் கால்மாட்டில் அமர்ந்திருந்து கோமளாவின் கால்களை மெதுவாக பிடித்துவிட்டார்.

கண்ணன் வந்துவிட்டான். வேலையிலிருந்து அப்படியே ஆஸ்பத்திரிக்கு. இதற்கு முதலில் கோமாளாவிடம் திட்டு வாங்கப்போகிறான். “அப்பா நீங்க வீட்ட போயிட்டு வாங்க, நான் பார்த்துக்கொள்கிறேன்“ என்பவனுக்கு கீழ்த்தளத்து ரெஸ்டாரண்டில் ஒரு கோப்பிவாங்கிக் கொடுத்துவிட்டு, ஜக்கட்டை அணிந்தபடி சிவலிங்கம் வீடு நோக்கிபுறப்பட்டார். கோமளா இன்னமும் தூங்கிக்கொண்டே இருந்தாள். அவள் தலையை தடவிவிட்டு, “பாவம், நோவுல கண் துடிக்குது“ என்று சொல்லிக்கொண்டே, மனமில்லாமல் அறையைவிட்டு வெளியே வந்தார்.

சிவலிங்கம் ரிசப்ஷனைத் தாண்டும்போது, முதன்மை வைத்தியர் சிவலிங்கத்தை தன் அறைக்குஅழைப்பதாக கோல் வந்தது. எதற்காக இருக்கும்? புதிதாக ஒரு வைத்தியம் செய்வதாகஇருந்தால், அழைத்து, விளக்கம் கொடுத்து, அனுமதி வாங்கி, விண்ணப்பம்படிவத்தில் கையொப்பம் இட்டபிறகே, அந்த வைத்தியத்தை தொடங்குவார்கள்.

கடவுளேஇந்த முறையாவது எல்லாம் சரியாகோணும் என்று நேர்ந்தபடி வைத்தியருடைய அறைக்குள் நுழைகிறார்.

**"ஹாய் சிவலிங்கம், ஹாவ் ஆர் யூ டூயிங்?"**

வெறும் பேச்சுக்கு முகமன் சொல்லும் மனநிலையில் சிவலிங்கம் இல்லை.

**“டொக்டர் .... எனி நியூ ட்ரீட்மெண்டில் ஷி பி ஒல்ரைட்?”**

வைத்தியர் நிதானமாக பேசத்தொடங்கினார்.

**“இங்கேபாருங்கள் சிவலிங்கம். மிசஸ் கோமளாவுக்கு வந்திருக்கும் இந்த வியாதிபாரதூரமானது, இந்தவகை புற்றுநோய்கள் மிக ஆக்ரோஷமானவை. ஆரம்பத்திலேயேகண்டுபிடிக்காத காரணத்தால்....”**

அன்றாடம் கேட்ட வசனங்கள்தான். சிவலிங்கத்துக்கு இனியொருமுறை கேட்கத் தெம்பில்லை.

**“அவள் குணம் பெறுவாளா?இம்முறை என்ன வைத்தியம் செய்யப்போகிறீர்கள்?”**

**“நான்சொல்வதைக் கவனியுங்கள் சிவலிங்கம், இதற்கு வைத்தியம் செய்யலாம். ஆனால்பிரயோசனமில்லை, அவர் இப்பொழுதே மிகக் கடுமையாக வேதனைப்படுகிறார். இனியும்வைத்தியம் செய்தால், வேதனை தாங்கமுடியாமல் போகும். அப்படியே செய்தாலும்சிலநாட்களைத்தான் தள்ளிப்போடலாமே ஒழிய, காப்பாற்றுவது கடினம்...”**

வைத்தியர் மேலும் விளக்கிக்கொண்டு போனார். சிவலிங்கத்துக்கு தாங்கோலாமல் போனது.

**“என்னதான் செய்யச் சொல்கிறீர்கள்?”**

**“.... இரண்டு வழிகள் இருக்கிறது. ஒன்று ... இப்படியே தொடர்ந்து வைத்தியம்செய்யலாம். மிகவும் வேதனைப்படுவார். தாங்கமுடியாது. காப்பாற்றவும்முடியாது. ஒருநாள் .. ஒருவாரம் .. ஒத்திப்போடலாம். ஆனால் வேதனைதாங்கமுடியாது ..”**

**“இன்னொரு வழி?”**

**“இன்னொருவழி,...வைத்தியத்தை நிறுத்திவிட்டு மோர்பின் கொடுப்பது. அவரை மயக்கத்திலேயேஆழ்த்தி, அவரை இந்த வேதனையிலிருந்து .... அவர் வலியில்லாமல்..”**

வைத்தியர் சொல்லிக்கொண்டிருக்கும் போதே சிவலிங்கம் எழுந்து வெளியே வந்துவிட்டார். என்ன இது? என்ன நடக்கிறது இங்கே? ஏன் எமக்கு மட்டும் இப்படி நடக்கிறது? அப்படி என்ன வயசாகிவிட்டது? ஐம்பது வயசெல்லாம் ஒரு வயசா? இன்னும் இருபதுவருடங்களாவது சேர்ந்து வாழ வேண்டுமே. மீண்டும் யாழ்ப்பாணம் போய், நிரந்தரமாக தங்கி, அங்கேயே ... ஏன்? என் மனைவியை,கோமளாவை, பார்த்துக்கொண்டிருக்கும்போதே எப்படி முடியும்? ....சிவலிங்கத்துக்கு இயலாமையில் உடல் தள்ளாடியது. அருகில் இருந்த சுவரோடு சாய்ந்தபடி கீழேஇருந்துவிட்டார். இதை எப்படி கண்ணனுக்கு சொல்லுவேன்?

இதை எப்படிகோமளாவுக்கு சொல்லுவேன்? கண்ணைத் திறக்கிறாள். என்னை அடையாளம் காண்கிறாள்.கதை சொன்னால் கேட்கிறாள். அவ்வப்போது சிரிக்கவும் செய்கிறாள். இவளை எப்படி? வலி அவளதுதானே? உடம்புமுழுதும் ஆயிரம் ஊசிகள் ஏக சமயத்தில் குத்திக்கொண்டிருக்க வாழு என்றால் வாழமுடியுமா? நரம்புமுழுக்க அமிலம் ஓடுவதுபோல எரிந்தால், எப்படி தாங்கமுடியும்? பாவம் அவள். சின்னதாக திட்டினால் கூட முட்டைக்கண்ணீர் வடிப்பவள். இவ்வளவு வலியையும் எப்படிபொறுக்கிறாள்? அழக்கூட திராணியில்லாத வலி.

சிவலிங்கம் கலங்கிய கண்களைத் துடைத்தபடி மீண்டும் கோமளாவின் அறைக்குச் செல்ல, கண்ணன் ஆச்சரியமாய்ப் பார்த்தான்.

**"என்னப்பா வீட்ட போகேல்லையா?"**

கோமளா இன்னமும் தூங்கிக்கொண்டிருந்தாள். முகத்தில் சலனம் எதுவுமில்லை. கண்கள் மட்டும் அயர்ச்சியாய் துடிப்பதுபோல. அவ்வப்போது சின்னதான முனகல் சத்தம். கைவிரல்கள் புரண்டுபடுக்க எத்தனித்தாலும் முடியமாட்டாத உடல். சிவலிங்கம் அவளை மெதுவாக புரட்டி அடுத்தபக்கம் படுக்கவைத்தார். தொடு-கையில் முழித்துவிட்டாள். இவர் கண்கள் கலங்கியிருந்ததையும் கண்டுவிட்டாள். சிரிக்கமுயன்றாள். அவள் கண்களில் சொட்டுக்கண்ணீர், மீதமிருந்தது, எட்டிப்பார்த்தது. இவளை எப்படி....? குடும்பத்தின் ஒரே ஆதாரம். இவளில்லாமல் நாங்கள் என்ன செய்வோம்? யாரிடம் பேசுவோம்? சண்டை போடுவோம்? நாளைக்கு கண்ணனுக்கு கலியாணம் என்றால் இவள் நிற்கவேண்டாமா? அறுபதாம் கலியாணத்தில்ஒரு தாலி கட்டவேண்டாமா? இவளைப்போய்? எப்படிச்சொல்வேன்? சிவலிங்கம்வெறித்தபடி நிற்க, கோமாளாவிடமிருந்து முனகல் வந்தது.

**"என்னம்மா ... நோகுதா? ஏலாம இருக்கா?"**

அவள் வாய் மீண்டும் சிரிக்க முயன்று தோற்றுப்போனது. மீண்டும் முனகி-னாள்.

திருமணம் முடித்து முதன்முதல் நல்லூருக்கு போகிறார்கள். சைக்கிளில். அவள் ஒரு நாவல்கலர் காஞ்சிபுரம் சேலை உடுத்திவந்தாள். ஞாபகம் இருக்கிறது. உள்வீதி சுற்றி கும்பிட்டுவிட்டு, வெளிவீதியில், ஐஸ்கிரீம் வானில் ஒரு கோன் வாங்கி சாப்பிட்டபடி வைரவர் மண்டபத்தருகே மரத்தடியில் உட்காரப்போகிறார்கள். கோமளா திடீரென்று அழத் தொடங்கிவிட்டாள். சத்தம் போடாமல் விசும்பி விசும்பி. திருமணம் முடித்து முதன்முதல் நல்லூருக்கு போகிறார்கள். சைக்கிளில். அவள் ஒரு நாவல்கலர் காஞ்சிபுரம் சேலை உடுத்திவந்தாள். ஞாபகம் இருக்கிறது. திருமணம் முடித்து முதன்முதல் நல்லூருக்கு போகிறார்கள். சைக்கிளில். அவள் ஒரு நாவல்கலர் காஞ்சிபுரம் சேலை உடுத்திவந்தாள்.

ஞாபகம் இருக்கிறது. “என்னம்மா?” என்று கேட்டதுக்கு “இந்த மரத்தடி வேர் எண்ட கால் சின்னி விரலைஅடிச்சிட்டுது” என்றாள். இவருக்கு சிரிப்பு வந்துவிட்டது. படக்கென்று சிரித்துவிட்டார். அவளுக்கு வந்ததே கோபம். சத்தம் போட்டு ஒப்பாரியே வைத்துவிட்டாள். என் வலி உனக்கென்ன அவ்வளவு இளக்காரமாக போய்விட்டதா? என்றஅழுகை. வீடு போகும் வரைக்கும் அவள் நிற்கவில்லை.

சிவலிங்கம் வைத்தியரின் அறைக்கு வேகமாக விரைந்தார்...

**ஜே.கே**




முன் கதைச்சுருக்கம்: ஊரிலேயே பெரிய மனிதரும் பணக்காரருமான 72 வயதான முத்துராஜப்பிள்ளையும் அவருடைய இரண்டாவது ச ண் நடராஜப்பிள்ளையும் அடுத்தடுத்து கொலை செய்யப்படுகிறார்கள். இன்ஸ்பெக்டர் நவநீதகிருஷ்ணன் தலைமையிலான விசாரணைக்குழுவிற்கு உதவுவதற்காக சிஜடி ஆபீசர் ஆனந்த் எழும்பூருக்கு வருகிறார் . சென்னை புதைபொருள் ஆராய்ச்சி மையத்திலிருந்து சில ஆராய்ச்சிகள் மேற்கொள்வதற்காக இந்த ஊருக்கு வந்திருப்பதாகக் கூறி முத்துராஜப்பிள்ளையின் பங்களா அவுட் ஹௌசில் தங்குகிறார் ஆனந்த். அன்று இரவு பங்களாவினுள் ஒரு கொலை முயற்சி நடக்கிறது. மறுநாள் சிற்ப்பாச்சாரியார் பழநிமலையை சந்திப்பதற்காக செல்கிறார் ஆனந்த். இனி....

“அவனுக்கு கொஞ்ச நாட்களாகவே இருதய நோய் இருந்திருக்கு. அத என்கிட்ட சொல்லாம மறைச்சிட்டான். அவனோட பையன் ரகுராமனுக்கு அப்போ 6 வயசிருக்கும். அப்பா இறந்த கவலையில குழந்தை ரொம்பவே பாதிக்கப் பட்டுட்டான். எதிலேயும் ஒட்டிக்காம விட்டேத்தியா ரெண்டு வருஷம் என் கூட இருந்தான். அப்புறமா ஒரு நாள் காணாமப் போயிட்டான். ஊருக்கு வந்திடுப்போன கல் உடைக்கிற லாரி ஒன்னில தொழிலாளிங்களோட அவனும் உட்கார்ந்து போனதைக் கண்டதா ஒருவர் வந்து சொன்னார். என்னை நம்பி சிவராமன் ஒப்படைச்சிடுப்போன பையனை நானே தொலைச்சிட்டு ஒடஞ்சு போயிட்டேன். அவன எங்க தேடியும் என்னால கண்டு பிடிக்க முடியல".

மீண்டும் கண்களைத் துடைத்துக் கொண்டு சுவரில் தொங்கவிடப்பட்டிருந்த ஒரு கறுப்பு வெள்ளைப் புகைப்படத்தை ஏறிட்டார் பழனிமலை. ஆனந்தும் கூர்ந்து அந்தப் படத்தைக் கவனித்தான்.

“அதுல உட்கார்ந்து இருக்கிறவன் சிவராமன். புல்லாங்குழல் வாசிச்சுக் கொண்டு நிற்கிற பையன் ரகுராமன்”.

ரகுராமன் அழகாக இருந்தான். கோகுலத்துக் கண்ணனை நினைவு படுத்தும் முகம்.

“தன்னோட பையனுக்கு ஐஞ்சு வயசிலேயே ஒரு குருவிடம் புல்லாங்குழல் கற்பிக்க ஏற்பாடு செய்தான் சி-வராமன். அவனோட மறைவுக்குப் பிறகு ரகுராமன் புல்லாங்குழல் பயிலப் போகல. சிவராமனுக்குப் பிறகு தர்மகர்த்தா பரம்பரை மறைஞ்சு போச்சு. கோயில நிர்வகிக்க யாருமே முன் வரல. கொஞ்ச நாள் கழிச்சு ஊர் மக்களெல்லாம் கூடி ஊரில பணக்காரரா இருந்த முத்துராஜப்பிள்ளையை கோயில் நிர்வாகத்த ஏத்துக்கச் சொல்லி வற்புறுத்திக் கேட்டுக் கிட்டாங்க. அவரும் ஏத்துக்கிட்ட்டாரு. அவருக்குப் பின்னாடி அந்தப் பொறுப்பை நடராஜபிள்ளை ஏத்துக்கிட்ட்டாரு. அவரோட கொலைக்கப்பறம் சுந்தரமூர்த்தியும் பிரகாஷும் கோயில் நிர்வாகத்த கவனிக்கிறாங்க”.

“ரொம்ப நன்றிங்க. ஏதாவது தகவல் தேவைப்பட்டா உங்களை மீண்டும் வந்து சந்திக்கிறேன்”

கூறிவிட்டு எழுந்து கொண்டான் ஆனந்த்.

“கோயிலைப் பத்தின குறிப்புகள் கொண்ட புத்தகம் இது. உங்க ஆராய்ச்சிக்கு ரொம்ப உதவியா இருக்கும்”

ஒரு தடிமனான புத்தகத்தை எடுத்துத் தந்தார் பழனிமலை. வாசல் வரை வந்து வழி அனுப்பி வைத்தார். மீண்டும் நன்றி கூறி விட்டுப் புறப்பட்டான் ஆனந்த்.

அவுட் ஹௌசை அடைந்த போது இன்ஸ்பெக்டர் நவநீதகிருஷ்ணனிடம் இருந்து வந்திருந்த ஈமெயில் இரண்டு ஆச்சரியமான தகவல்களைத் தந்திருந்தது.

1. கட்டை பிரமச்சாரி என்று நினைத்திருந்த கைலாசபிள்ளைக்கு மலேசியாவில் ஒரு குடும்பம் இருக்கிறது.

2. சிங்கப்பூரில் அவர் செய்து வந்த ரியல் எஸ்டேட் பிசினெஸில் கடந்த இரு வருடங்களாகப் பல ஆயிரம் டாலர்கள் நட்டம் ஏற்பட்டிருக்கிறது.

ஆனந்துக்கு குழப்பமாக இருந்தது. கைலாசபிள்ளையின் மீது இதுவரை நடந்த கொலைகள் தொடர்பாக சந்தேகத்தின் சிறு கீறல் கூட விழுந்ததில்லை. உயில் பிரகாரம் மேலதிக சொத்து அவருக்குக் கிடைப்பதற்கும் வழியில்லை. ஆனாலும் இன்னொரு ஆங்கிள்ல யோசித்துப் பார்த்தா சிறிதாக தெரிஞ்ச சந்தேகப் புள்ளி கொஞ்சம் விசாலமாவது போலப் புலப்பட்டது.

தன்னுடைய பிசினஸ் லாஸ்ட் விஷயமா அப்பா முத்துராஜப்பிள்ளை கூட பணம் கேட்டு வாக்குவாதம் ஏற்பட்டிருக்கலாம். இதனால உயிலை மாத்தி எழுதச் சொல்லி தகராறு எழுந்து அது கொலை செய்யப்போற அளவுக்கு விஷயம் முத்தியிருக்கலாம். அவரோட கொலைக்கப்பறம் சகோதரன் நடராஜபிள்ளையை தீர்த்துட்டா குடும்பத்தில எஞ்சியிருக்கிற ஆண் வாரிசு பிரகாஷ் தான் அடுத்த இலக்கு. இது தான் நேற்று நடந்த கொலை முயற்சி வரை வந்திருக்கு. ஆனால் நேற்றைய கொலை முயற்சி நடந்தப்போ கைலாசபிள்ளை ஓவர்சீஸ்ல இருந்திருக்கார். இந்த ஊகம் சரியா இருந்தா அவரோட திட்டங்களுக்கு உடந்தையா ஒருவரோ சிலரோ பங்களாவுக்குள்ள இருக்கணும்.

தன்னுடைய ஊகத்தை ஈமெயில் செய்து நவநீதகிருஷ்ணனுக்கு அனுப்பினான் ஆனந்த். கைலாசபிள்ளையின் நடவடிக்கைகளை தொடர்ந்து அவதானிக்குமாறும், கூடவே பங்களாவில் வேலை செய்பவர்கள், பயோ டாடா உட்பட அவர்கள் வந்து ஜாயின் பண்ணிய டேட்

உள்ளிட்ட அத்தனை விபரங்களையும் இருந்தால் அனுப்பும்படியும் இல்லாவிட்டால் சேகரிக்கும்படியும் ஒரு வேண்டுகோளையும் வைத்துவிட்டு சிறிது கண் அயர்ந்தான்.

"எல்லாருமா சேர்ந்து டின்னெர் எடுத்துக்கலாம்". இரவு மணி ஏழரை. இன்டர்காம் சிணுங்கியது. மறுமுனையில் சுந்தரமூர்த்தி.

"ஆனந்த், நாளைக்கு என் மருமக காவ்யாவோட பர்த்டே. ஹாஸ்டலேர்ந்து காவ்யாவோட என் பொண்ணுங்க மைதிலி, வாசுகி எல்லாம் வந்திருக்காங்க. நீங்க ப்ரீயா இருந்தா டைனிங் ஹால் வாங்க.

"ஒ ஷூர். கிவ் மி ஜஸ்ட் டென் மினிட்ஸ் சார். ஐ வில் ஜாயின் வித் யு ஆல்".

டைனிங் டேபிளை அடைந்தபோது சுந்தரமூர்த்தி உற்சாகமாக மூன்று பெண்களையும் அறிமுகம் செய்து வைத்தார். மைதிலியும் வாசுகியும் அப்பா சுந்தரமூர்த்தி சாயலில் இருந்தார்கள். சுமாரான அழகு. காவ்யாவின் அழகு தான் ஆனந்தைக் கிறங்க அடித்தது. அழகான முகம், எடுப்பான நாசி, கவர்ச்சியான கண்கள், அளவான மேக்கப். மெலிதான புடவையில் ஒரு தேவதை போல காட்சி அளித்தாள். நிச்சயமாக எந்த ஒரு ஆடவனையும் மீண்டும் மீண்டும் பார்க்கத் தூண்டும் அழகு.

ஒருவாறு தன்னைச் சுதாகரித்துக் கொண்டான் ஆனந்த்.

சுந்தரமூர்த்தி உற்சாகமாக சொன்னார்.

"நாளைக்கு ஒரு பார்ட்டி ஒர்கனைஸ் பண்ணியிருக்கேன். ரொம்ப நாளைக்கப்புறமா எங்க வீட்ல நடக்கிற சந்தோசமான நிகழ்ச்சி. ஒரு சில நெருங்கின சொந்தக்காரங்க, பிரெண்ட்ஸ் தவிர நாங்களும் எங்க கூட சுக துக்கங்களில பங்கெடுத்துகிற எங்க வீட்டு பணியாட்களும் பங்கு கொள்ற நிகழ்ச்சி. டின்னெருக்கான மெனுவ மூணு பொண்ணுங்களும் டிசைட் பண்ணுங்க. வாசுகி கேக் ஸ்பெஷலிஸ்ட். பூந்து விளையாடிடுவா. இரவு ஏழு மணி வாக்கில கேக் கட்டிங்"

மூன்று பெண்களும் தங்களுக்குள் ஏதோ பேசி சிரித்துக் கொண்டார்கள். மைதிலி தைரியமாக கேட்டாள்.

"சார், நீங்க ஏதோ ரிசேர்ச் செய்றதா அப்பா சொன்னார். என்ன தான் செய்றீங்க.உங்க ரிசேர்ச் எந்த அளவில போய்கிட்டிருக்கு"

ஆனந்த் புன்னகைத்தான்.

"இந்த ஊரில சில அகழ்வாராய்சிகள மேற்கொள்ள வேண்டி இருக்கு. அதுக்கு முன்னோட்டமா சில இன்போர்மேஷன் கலெக்ட் பண்றதுக்காக என்னை அனுப்பியிருக்காங்க. இன்னும் சில வாரங்கள் இங்கே தங்கியிருக்க வேண்டியிருக்கும்".

"எங்களுக்கு எந்த ஆட்சேபனையும் இல்ல சார். நீங்க எவ்வளவு நாள் வேண்ணாலும் தங்கிக்குங்க".

சொல்லிவிட்டு உதட்டுக்குள் சிரித்துக் கொண்டாள் மைதிலி.

"ஏய் வாயாடி அவர ஏன் வம்புக்கு இழுக்கிற" கடிந்து கொண்டாள் வாசுகி.

பார்த்தும் பார்க்காதது போல இடைக்கிடை ஆனந்தை ஓரக்கண்ணால் பார்த்து கொண்டாள் காவ்யா. ஆனந்தும் அதனைக் கவனித்தான்.

பிரகாஷ் எதுவும் பேசாமல் சாப்பிட்டுக் கொண்டிருந்தான். ஏதோ யோசனையில் இருப்பது தெரிந்தது.

அவனது சிந்தனையை கிளறினான் ஆனந்த். "என்ன மிஸ்டர் பிரகாஷ். சிஸ்டர்ஸ் எல்லாம் வந்திருக்காங்க. நீங்க ஏதோ சிந்தனையில இருக்கீங்க.

ஆர் யு ஆல் ரைட்“

“ஐ ஆம் பைன் மிஸ்டர் ஆனந்த். அப்பப்ப இந்த வீட்ல நடக்கிற விரும்பத்தகாத விஷயங்கள் மனச கொஞ்சம் பாதிச்சிருச்சு. அம்மாவும், அம்மம்மாவும் உடம்புக்கு முடியாம இருக்காங்க. பெரியப்பா எதையுமே கண்டுக்காம அடிக்கடி வெளிநாடுன்னு பறந்து கிட்டிருக்காரு“

சுந்தரமூர்த்தி அவனை சமாதானப்படுத்தினார்.

“சியர் அப் மை பாய். எல்லாமே நல்லதா நடக்கும். நாங்க யாருக்கும் எந்த துரோகமும் செய்யல. அந்த விநாயகர் தான் எங்க வீட்ல பழைய உற்சாகத்த தரணும்“.

எல்லோருக்கும் குட் நைட் சொல்லிவிட்டு அறைக்கு திரும்பிய ஆனந்துக்கு கைலாசபிள்ளையின் ரூமை ஒரு முறை சோதனை செய்ய வேண்டும் என்ற எண்ணம் வந்தது.

எல்லோரும் தூங்கும் வரை காத்திருந்து விட்டு மெதுவாக வெ-ளியேறி பங்களாவை அடைந்தவன் கைலாசபிள்ளையின் அறையை நோக்கி மெதுவாக அடி எடுத்து வைத்தான். அறை உள்பக்கமாக தாளிடப்பட்டிருந்தது. உள்ளேயிருந்து சுந்தரமூர்த்தியின் பேச்சுக்குரல் கேட்டது.

**தொடரும்............**

---

ஆடிப்பிறப்புக்கு நாளை விடுதலை
ஆனந்தம் ஆனந்தம் தோழர்களே
கூடிப் பனங்கட்டி கூழுங் குடிக்கலாம்
கொழுக்கட்டை தின்னலாம் தோழர்களே

பாசிப்பயறு வறுத்துக் குற்றி செந்நெற்
பச்சையரிசி இடித்துத் தெள்ளி
வாசப் பருப்பை அவித்துக் கொண்டு நல்ல
மாவைப் பதமாய் வறுத்தெடுத்து

வேண்டிய தேங்காய் உடைத்து துருவியே
வேலூரிற் சக்கரை யுங்கலந்து
தோண்டியில் நீர்விட்டு மாவை யதிற்கொட்டிச்
சுற்றிக் குழைத்து திரட்டிக்கொண்டு

வில்லை வில்லையாக மாவை கிள்ளிதட்டி
வெல்லக் கலவையை உள்ளேயிட்டு
பல்லுக் கொழுக்கட்டை அம்மா அவிப்பளே
பார்க்கப் பார்க்கப்பசி தீர்ந்திடுமே

பூவைத் துருவி பிழிந்து பனங்கட்டி
போட்டுமா வுருண்டை பயறுமிட்டு
மாவைக் கரைத்தம்மா வார்த்துத் துழாவுவள்
மணக்க மணக்கவா யூறிடுமே

குங்குமப் பொட்டிட்டுப் பூமாலை சூடியே
குத்துவிழக்குக் கொளுத்தி வைத்து
அங்கிள நீர்பழம் பாக்குடன் வெற்றிலை
ஆடிப் படைப்பும் படைப்போமே

வன்னப் பலாவிலை ஓடிப் பொறுக்கியே
வந்து மடித்ததைக் கோலிக்கொண்டே
அன்னை அகப்பையால் அள்ளி அள்ளிவார்க்க
ஆடிப் புதுக்கூழ் குடிப்போமே

வாழைப்பழத்தை உரித்துத் தின்போம்நல்ல
மாவின் பழத்தை அறுத்துத்தின்போம்
கூழைச் சுடச்சுட ஊதிக்குடித்துக்
கொழுக்கட்டை தன்னைக் கடிப்போமே

ஆடிப்பிறப்புக்கு நாளை விடுதலை
ஆனந்தம் ஆனந்தந் தோழர்களே
கூடிப் பனங்கட்டி கூழுங் குடிக்கலாம்
கொழுக்கட்டை தின்னலாம் தோழர்களே

**நவாலியூர் சோமசுந்தரப்புலவர்**

# அமரர் சட்டத்தரணி சி.கணேசலிங்கம்

## செயற்குழு உறுப்பினர், கேசி தமிழ் மன்றம்



"நாம் எமக்காக என்ன செய்தோமோ, அது எம் மரணத்தோடு மரணித்து விடுகின்றது. நாம் மற்றவர்களுக்கும் உலகத்திற்கும் செய்தவை என்றும் மரணிப்பதில்லை."

கேசி தமிழ் மன்றத்தின் செயற் குழு உறுப்பினராயும், எமது தமிழ் மூத்தோர் அணியின் ஆர்வமிகு அங்கத்தவராகவும் செயற்பட்ட திரு.சி.கணேசலிங்கம் அவர்கள், 15/11/2013 அன்று இறைபதம் அடைந்தார். அன்னாரின் மறைவு எமது மன்றத்திற்கும் இங்கு வாழும் எம் சமூகத்திற்கும் பேரிழப்பாகும். அவரது அனுபவமும் ஆளுமையும் விக்டோரிய தமிழ் சமூகத்திற்கு கிடைக்க காலம் கனிந்த வேளையில் நாம் அவரை இழந்துவிட்டோம்.

பண்பாட்டு பாரம்பரியம் மிக்க கொல்லங்கலட்டி கிராமத்தில் , சமூக உணர்வு மிக்க குடும்பத்தில் உதித்த அமரர் கணேசலிங்கம் அவர்கள் தன் சட்டத் தொழிலை-அறிவை சமூக மேம்பாட்டிற்காய் பயன்படுத்தித்திய தன்னலமற்ற சமூகத் தொண்டனாவர். இலங்கையில் மனித உரிமை செயற்பாட்டாளராய், Home for Human Rights எனும் அமைப்பின் சட்ட பணிப்பாளராய், இலங்கை செஞ்சிலுவை சங்கத்தின் யாழ் கிளையின் செயலாளராய் இலங்கை தமிழ் சமூகத்திற்கு இவர் ஆற்றிய சேவை அளப்பரியது.

நேரிடையான பேச்சும் மற்றவர்களுக்கு நல்லது செய்ய நினைக்கும் பண்பு மிக்க எளிமையான மனிதர் என கேசி தமிழ் மன்றத்தின் மூத்தோர் அணி அங்கத்தவரின் அன்பைப் பெற்ற அவரின் பயனுள்ள வாழ்வு எம்மை வழி நடத்தட்டும்.